நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

PUTHIYAPOOMI

புதிய பூமி

சுற்று 04 செப்டெம்பர் 1997 சுழற்சி 14 பக்கம் 12 விலை ரூபா 10/=


## அமைச்சர் இப்படிக் கூறுகிறார்.

''நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவே அரசாங்கம் தாராள - திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் திறந்த பொருளாதாரத்தினால் நாட்டில் லஞ்சமும் ஊழலும் மோசடியும் அதிகரிக்கும், குற்றச் செயல்கள் பெருகும், வறியோரின் தொகை அதிகரிக்கும் என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்'' இவ்வாறு அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்கா யுக்திய பத்திரிகைக்கு அளித்துள்ள பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்? அப்படியாயின் பொருளாதார அபிவிருத்தியின் பெயரில் லஞ்சம் ஊழல் மோசடி குற்றச் செயல்கள் வறுமை என்பனவற்றை நாட்டு மக்கள் அங்கீகரித்து ஏற்றுக் கொள்ள வேண்டுமா?

## பெருந்தோட்ட கம்பனிகளுக்கு எதிராக

# புதுப் போராட்ட முனைப்பு

**கந்தப்பொளை மத்துரட்ட பிளேண்டேசன் கம்பெனிக்கு எதிராக பத்துவீத லாபப்பங்குகளை தொழிலாளர்களுக்கு வழங்கவேண்டுமென கோரி நடத்தப் பட்ட வேலைநிறுத்தப் போராட்டம் முன்மாதிரியானதாகும். இதன்மூலம் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்து அவர்களை அடக்கி ஒடுக்கி வருகின்ற தனியார் கம்பெனிகளுக்கு எதிரான தொழிலாளர்களின் போராட்டம் மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் முனைப்பு பெறுவதை அவதானிக்க முடிகிறது.**

தனியார் கம்பெனிகளுக்கு எதிராக வெற்றிகரமாக எவ்விதப் போராட்டத்தையும் செய்ய முடியாது என்றே மலையகத்தின் பழம்பெரும் தொழிற்சங்கத் தலைவர்கள் கருத்து தெரிவித்து வந்தனர். மலையக தோட்டங்களை 22 தனியார் கம்பெனிகள் நிர்வகிப்பதால் ஒரு போராட்டத்தினூடாக ஒரே நேரத்தில் 22 கம்பெனிகளையும் பாதிக்கக் கூடியதாக போராட்டங்களை முன்னெடுக்க முடியாது என்பதாலேயே அவ்வாறான கருத்தை தெரிவித்து வருகின்றனர்.

எட்டு ரூபா சம்பள உயர்வை கேட்டு நடத்திய வேலைநிறுத்தப் போராட்டம் வெற்றிகரமாக நடந்த போதும் எட்டுரூபா சம்பள உயர்வை தொழிலாளர்களால் பெறமுடியவில்லை. தோட்டக் கம்பெனிகளை கட்டுப்படுத்தி எட்டு ரூபா சம்பளத்தை வழங்கும்படி கட்டாயப்படுத்த வேண்டிய பொறுப்பிலிருந்து அரசாங்கம் நழுவிக் கொண்டது. தோட்டத் தொழிலாளர்களின் தொழிற்சங்கங்களும் முழுப்பலத்தையும் பிரயோகித்து தனியார் கம்பெனிகளை எதிர்த்து நிற்கவில்லை.

அந்தப் போராட்டத்திற்குப் பிறகு தொழிலாளர்களை கட்டுப்படுத்தக்கூடிய கூட்டு ஒப்பந்தமொன்றை செய்ய வேண்டும் என்று தோட்டக்கம்பெனிகள் முதலாளிமார் சம்மேளத்தினூடாக முயற்சிகளை எடுத்து வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுகளை மறுக்கின்ற, வேலை நிபந்தனைகளை சுமத்துகின்ற ஏற்பாடுகளை கொண்ட கூட்டு ஒப்பந்தமொன்றை தோட்டக் கம்பெனிகளின் சார்பாக முதலாளிமார் சம்மேளனம் இ.தொ.கா. இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்பவற்றுடன் செய்து கொள்ள முயற்சித்து வருகிறது.

ஏனைய தொழிற்சங்கங்களினதும் அரசியற் கட்சிகளினதும், தொழிலாளர்களினதும் எதிர்ப்பால் அவ்வொப்பந்தம் இதுவரை கைச்சாத்திடப்படவில்லை.

அவ்வொப்பந்தம் பற்றி மீண்டும் கதைக்கப்படுகிறது. அவ்வொப்பந்தத்தின் நகல் பிரதிகள் இ.தொ.கா, இ.தே.தோ.தொ.சங்கம் என்பவற்றிடமும் தோட்டக் கம்பெனிகளிடமும் இருப்பதாகவும் அறிய முடிகிறது. அதில் தொழிலாளர்களின் உரிமைகளை பாதிக்கும் ஏற்பாடுகள் இருப்பதால் தொழிலாளர்களுக்கு வெளிப்படுத்த தயக்கம் காட்டப்படுகிறது.

தொழிலாளர்களுக்கு அவ்வொப்பந்த ஏற்பாடுகளை வெளிப்படுத்தாமல் இ.தொ.கா.வும், இ.தே.தோ.தொ.சங்கமும் தோட்டத் தொழிலாளர்கள் சார்பில் கைச்சாத்திட்டால் அது தோட்டக் கம்பெனிகளுக்கு தொழிலாளர்களை அடிமைகளாக்கும் செயலாகவே அமையும்.

தொழிற்சங்கங்களின் கையாலாகாத நிலைமையினாலேயே அவ்வாறான ஒப்பந்தத்திற்கு இணங்கிப் போகவுள்ளன என்று கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இவ்வேளையில் தோட்டங்களை பொறுப்பெடுக்கும்போது வாக்குறுதி அளித்தபடி கம்பெனிகள் எவ்வித உரிமைகளையும் தொழிலாளர்களுக்கு வழங்கவில்லை. அதுமட்டுமல்ல ஏற்கனவே இருந்த உரிமைகளையும், சலுகைகளையும் மறுத்தே வருகின்றன. இதனாலேயே கம்பெனி நிர்வாகங்களுக்கு எதிராக தொழிலாளர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் அதிகரித்து வருகின்றன.

கம்பெனிகளிடம் உரிமைகளை நிலைநாட்ட முடியாத நிலையில் தொழிற்சங்கங்கள் இருப்பதனாலே அதிகமான தொழிலாளர்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

## ஜனநாயக விரோத கொலைக்கள ஆட்சி நடாத்திய ஐ.தே.கட்சி எப்போது தீக்குளித்தது!

கடந்த 24.08.97 அன்று களுத்துறையில் உள்ள மகாபோதியில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் அவரது கட்சியினரும் காணிக்கை கட்டும் நிகழ்ச்சியை நடாத்தினர். இக்காணிக்கை எதற்காகக் கட்டப்பட்டதெனில் எதிர்காலத்தில் தேர்தல்கள் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடைபெறவேண்டும் என்பதற்காகவேயாகும். ஏற்கனவே 16.08.97 அன்று இதே ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இன்றைய அரசாங்கம் மூன்று வருடங்களுக்கு முன்பு மக்களுக்கு கொடுத்துள்ள வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதைக் கண்டித்து கொழும்பில் எதிர்ப்பு சத்தியாகிரகத்தை நடாத்தியது. மேலும் நாடு முழுவதிலும் தொடர் சத்தியாக்கிரக இயக்கத்தை நடாத்தப் போவதாகவும் அக்கட்சி பிரகடனம் செய்துள்ளது.

ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சி அரசாங்கத்தின் பொறுப்பற்ற நடவடிக்கைகளை எதிர்ப்பது முற்றிலும் நியாயமானது. அது மட்டுமன்றி மக்கள் இயக்கத்திற்குத் தலைமை தாங்க வேண்டியதும் தவிர்க்க வியலாத ஒன்றாகும். தற்போதைய அரசாங்கம் தேர்தலில் தில்லுமுல்லுகள் செய்து வருவதும், வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்பதும் விலை உயர்வுகளைக் கொண்டு வருகின்றமையும் ஏற்றுக் கொள்ளத்தக்க செயல்கள் அல்ல. அவற்றை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாத மக்கள் விரோதச் செயல்கள் என்பதிலும் இருகருத்துகட்கு இடமில்லை. ஆனால் இவற்றை எதிர்ப்பதாகக் கூறி ஐக்கிய தேசியக்கட்சி ஒரு எதிர்ப்பியக்கம் நடாத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு எத்தகைய யோக்கியதை இருக்கிறது என்பதே மக்களின் கேள்வியாகும். பதினேழு வருட கால ஐக்கியதேசியக் கட்சி ஆட்சியில் ஜனநாயக மனித உரிமைகள் எத்தகைய கேவலத்தை அடைந்து கொண்டன. சிங்கள மக்களில் அறுபதினாயிரம் பேர்வரையிலும் தமிழ் மக்களில் நாற்பதினாயிரம் பேர் வரையிலும் சுமார் ஒரு லட்சம் மக்கள் கொன்றழிக்கப்பட்டனர், காணாமல் போகச் செய்தனர். இப் படுகொலைக் களத்தை நடாத்தியவர்கள் இது வரை இறந்து போன ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர்கள் மட்டும்தானா? தற்போதைய தலைவர்களுக்கு எவ்வித பொறுப்பும் கிடையாதா? சினிமாக் கல்லூரியில் இருந்து புதிய நடிகர்கள் வருவது போன்று ரணில் விக்கிரமசிங்கா அரசியல் கல்லூரில் தலைமைத்துவப் பயிற்சி பெற்று விட்டு இந்த வருடம்தான் அரசியல் களத்தில் இறங்கியவரா? அவரது கைகளில் இரத்தக் கறையோ அவரது சகபாடிகளின் உடைகளில் மனித தசைகளின் துகள்களோ படிந்திருக்கவில்லையா? அன்றைய கொலைக்களத்தை நடாத்தி ஜனநாயக மனித உரிமைகளை மிதித்து நின்ற ஐக்கிய தேசியக்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

## இது உண்மையா ?

'இலங்கை ராணுவம் தமிழ் மக்களின் மனங்களை வென்றெடுத்து விட்டது. அவர்கள் இலங்கை இராணுவத்தை விரும்புகிறார்கள். அதனால் எல்.ரீ.ரீ.ஈ. இற்கு எதிராக நடத்தப்படுகின்ற யுத்தத்தில் இராணுவத்திற்கு தமிழ் ஆயுதக் குழுக்களின் உதவி தேவையில்லை. அக்குழுக்களின் உதவியை இராணுவம் பெறுவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. இவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பான இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் கருணதிலக கூறியுள்ளார்.

## கல்விக்கான அரசு செலவினம் வீழ்ச்சி

கடந்த 30 வருடங்களாக தென்னாசிய நாடுகளிலேயே கல்விக்காக மிகவும் குறைவாக செலவழித்து வரும் நாடு இலங்கை ஆகும். 1984 ஆம் ஆண்டு 27 சதவீதத்தை கல்விக்காக செலவழித்தது. 1994 ஆம் ஆண்டு 4.7 சதவீதத்தையே செலவழித்தது. கல்விக்கான செலவீனத்தை மேலும் குறைக்கும் நோக்கத்துடனேயே புதிய கல்வித்திட்டம் அறிமுகம் செய்யப் படவுள்ளது.

## பெண்கள் எங்கே போவது ?

நாட்டில் நாளாந்தம் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் இடம்பெறுகின்றன. மூன்றரை வயது சிறுமி தொட்டு குடும்பப் பெண்கள் வரையான அனைத்து நிலைப் பெண்களிடையே இக்கொடூரம் நிகழ்ந்து வருகின்றன. ஆயுதப்படையினர் தொட்டு நீதிபதிவரை இளைஞர் முதல் பெற்ற தந்தை வரை பாலியல் வல்லுறவின் கதாநாயகர்களாகி நிற்கின்றனர். பெண்கள் எங்கே செல்வது? என்ன செய்வது? அமைப்புக்களாவது ஆர்பரித்தெழுவது முன்நோக்கிச் செல்வது, பெண்கள் மட்டுமன்றி ஆண்களும் இணைந்தே.

## 15 மணி நேரம் கட்டாய வேலை

15 மணி நேரம் கட்டாய வேலை. பியகம செரமிகஸ் கம்பெனியில் பெண்தொழிலாளிகள் ஒரு வாரத்தில் 4 நாட்கள் காலை 7 மணியிலிருந்து இரவு 10 மணிவரை கட்டாயமாக வேலை செய்ய வேண்டும் என்று நிர்ப்பந்திக்கப்படுவதாக அறியமுடிகிறது. எட்டுமணி வேலைக்கான போராட்டம் மேதினத்தின் முக்கியத்துவம் எல்லாமே பெறுமதியற்று போய்விட்டனவா?

நன்றி - நூலகத்திட்டம்



## கருத்தடைத்திட்டமா? இனவழிப்புத் திட்டமா?

அண்மையில் ஆதார வைத்தியசாலையொன்றில் பிரசவத்திற்காய்ச் சென்றிருந்த தமிழ்ப் பெண்மணி ஒருவரை வற்புறுத்திக் கருத்தடைச் சிகிச்சை செய்து கொள்ளும் படியும், சத்திரசிகிச்சைக்கான பத்திரமொன்றில் கையொப்பமிடும்படியும், கையொப்பமிட்டால் மாத்திரமே வைத்தியசாலைக்குள் அனுமதிக்கப்போவதாகவும் தாதி ஒருவர் கூறியுள்ளார். அதை மீறி அப்பெண் உறுதியாய் இருந்தமையாலும் தான் வைத்தியசாலைச் சூழலிலேயே குழந்தையைப் பெற்றுக்கொள்ளப்போவதாகவும் கூறியதால் அப்பெண் அனுமதிக்கப்பட்ட சம்பவம் நுவரெலியா மாவட்ட ஆதார வைத்தியசாலை ஒன்றில் இடம்பெற்றுள்ளது. இதுபோல நாட்டின் பல பகுதிகளிலும் தமிழர்கள் மீது மட்டும் குடும்பக்கட்டுப்பாட்டு முயற்சிகளைத் திணிப்பதில் பேரினவாதிகள் ஆர்வம் காட்டுகின்றனர்.

மேற்குறிப்பிட்ட பெண் ஒரு உதாரணம் மட்டுமே. வைத்தியசாலைக்கு வருகின்ற பலரை தாதிமார் நாசுக்காகக் கதைப்பதன் மூலமாகவும் கோபமாகத் தன்னைக் காட்டிக்கொண்டு ஏசுவதனூடாகவும் கருத்தடை செய்துகொள்ளுமாறு வற்புறுத்துகின்றார்கள். இலங்கையில் தமிழர் போரின் காரணமாக ஏற்கனவே அழிந்துவரும் இவ்வேளையில் செயற்கையாக மலையகத்தில் இனக்கட்டுப்பாட்டை மேற்கொள்ள பலரும் கங்கணங் கட்டியிருப்பதை அவதானிக்க முடிகின்றது. குடும்பக் கட்டுப்பாடா? அல்லது இனக் கட்டுப்பாடா? என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். மலையகத்தில் இவ்வாறான வேலைகளில் பலர் மறைமுகமாக லஞ்சம் வாங்கிக்கொண்டு இவ்வாறான வேலைகளில் ஈடுபடுவதை துருவி ஆராய்ந்தால் கண்டுகொள்ள முடியும்.

இது இப்படியிருக்க ஏனைய சமூகத்தினர்களை இக் கட்டுபாட்டின் மூலம் கட்டுப்படுத்த முனைவதில்லை. உதாரணமாக இராகலைப் பகுதியில் அண்மையில் நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சைக்கு தாய் தனது குழந்தையுடன் பேரக்குழந்தையையும் கூட்டிவந்தார். ஆக இவர்களுக்கெல்லாம் இத்தகைய கட்டுப்பாடு இல்லையாமோ?

பாராபட்ச குடும்பக் கட்டுப்பாட்டு முறையை அன்றி எல்லோருக்கும் பொதுவான கட்டுப்பாட்டு முறையை அரசு மேற்கொள்ள வேண்டும். மலையகத்தில் உள்ள பெற்றோர் இந்த விடயத்தில் மிகக் கவனமாக இருப்பது நல்லது. வெறும் 500 ரூபா அல்லது 1,000 ரூபா பணத்திற்காக இத்தகைய சிகிச்சைகளை மேற்கொள்ளக்கூடாது. அண்மைய தரவுகளின்படி பாடசாலையில் ஆண்டு ஒன்றிற்குச் சேர்க்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிக அளவு குறைந்துள்ளதை புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

இதற்குரிய பிரச்சாரங்களை புத்திஜீவிகள், கல்விமான்கள், சமூக அக்கறையுள்ளோர் செய்வது மிக மிக அவசியமாகின்றது.

## கல்வி பெறுவதில் ஒருமுன்மாதிரி

சாமிமலை பெயார்லேன் தோட்டத் தொழிலாள இளைஞர்கள் தங்களுடைய இருள் சூழ்ந்த எதிர்காலத்தை கல்வியறிவாலே ஒளியேற்றலாம் எனும் உத்வேகத்தோடும், நாங்கள் ஏமாளிகளாகயிருப்பதற்கு படிக்காததும், எங்களை மந்தைகளாக நினைக்கும் மானிடனை மனிதர்களாக நாங்கள் நினைத்ததையும் வைத்து எங்களை ஏமாற்றிக்கொண்டிருந்த காலம் மலையேறிப் போய் விட்டது. இத்தகைய முனைப்போடு தோட்டப் பாடசாலையோடு கதைத்து ஆசிரியர்களை வற்புறுத்தி எங்களுக்கு படிப்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதோடு இக்கல்வி நிகழ்ச்சி 13-8-97 அன்று தோட்ட வாசிகசாலையில் தோட்ட பிரதம (தலைமை) கணக்குப்பிள்ளை தலைமை தாங்கவும் தோட்டத்தின் சகல சங்கத் தலைவர்களும் பாடசாலை அதிபர் ஆசிரியர் ஒத்துழைப்போடு இந்நிகழ்ச்சி ஆரம்பமாகியது.

தோட்ட தலைமை கணக்குப்பிள்ளை திரு. ஜீவரட்ணம் உரையாற்றும்போது எனது 20 வருட தோட்ட வாழ்க்கையில் இது ஒரு புது அனுபவம். இதற்கு வழியமைத்த ஆசிரியர்களைப்போல் மலையகத்தின் உள்ள ஆசிரியர்கள் மனமுவந்து தங்களுடைய மக்களுக்கு உதவுவார்களேயானால் மலையகம் இன்னும் சிறிது காலத்திலே தலை நிமிர்ந்துவிடும் என்றார்.


அடுத்ததாக தோட்டத்தின் சகல சங்கத்தின் தலைவர்களும் இந்நிகழ்ச்சி மலையத்தில் ஒரு புது அத்தியாயத்தைத் தொடக்கிவைத்துள்ளது என்றும் இந்த எண்ணமும் ஒற்றுமையும் நம்மிடையே இருக்குமேயானால் நிச்சயும் எந்த சக்தியாலும் எங்களை ஏச்சுப் பிழைக்க முடியாது என்று கூறினார்.

தொழிலாள இளைஞர்களின் சார்பாக செல்வன் நாகேஸ் உரையாற்றினார். நாம் ஏன் இப்படி இருக்கிறோம். என்றைக்கும் மற்றவர்கள் கூறுவதையே கேட்காமல் சுயமாக முடிவெடுக்க எமக்குக் கல்வி முக்கியமானது என்பதை உணர்ந்தே நாம் இந்த முடிவை எடுத்தோம் என்றும் இம்மாதிரி எமது மலையகத்தின் தொழிலான இளைஞர்கள் முன்வந்து எமது எதிர்காலத்தை நாமே தீர்மானிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் முன்வருவார்களேயானால் நிச்சயம் எதிர்காலத்திலாவது நாம் மனிதர்களாக மதிக்கப்படுவோம் என்றார்.

## தோட்டங்களில் இராணுவத்தினருக்குக் காணி

வடக்கு-கிழக்கு யுத்தத்தில் பாதிக்கப்பட்ட இராணுவ வீரர்களுக்கு வலப்பனைப் பகுதியில் பல தோட்டங்களில் காணிகள் வழங்குவதற்கு மறைமுக ஏற்பாடுகள் நடைபெறுவதை அறிய முடிகின்றது. இதனது முதற்கட்டமாக ஹை பொரஸ்ட்,' பகுதியிலுள்ள ரிலா முல்ல தோட்டப் பகுதியில் சுமார் 100 ஏக்கர் தேயிலைத் தோட்டக் காணிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படுவதாகத் தெரியவருகின்றது. இதனால் காவத்தை. தங்கமலை, நிலாமுல்லை, குறுந்துஓயா போன்ற பல தோட்டங்கள் பாதிக்கப்படுவதாக பெயர்குறிப்பிட விரும்பாத ஒரு அதிகாரி தெரிவித்தார். ஏற்கனவே லியாங்கொல என்னும் தோட்டம் மூடப்படப்போவதாகத் தெரிகின்றது. இதனால் இப்பகுதியிலுள்ள ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப் படப் போகிறார்கள்.

ஏற்கனவே லத்துமுல்லை மேற்பகுதியிலுள்ள கொச்சிக்காய் தோட்டங்களை மூடி அங்குள்ள காணிகளை பெரும்பான்மை இன மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப் பட்டுள்ளது. டெல்மார் பணியக்கணக்கு தோட்டத்தில் பல காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் மேலும் தோட்டக் காணிகள் இராணுவத்தினருக்காக கொடுக்கப்பட இருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்கள் தெரிவித்தன.



## பொதி சுமக்க மாட்டாத தொண்டமான்

மலையக மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் வரை தீர்வுப்பொதிக்கு ஆதரவாக பிரச்சாரம் செய்யமாட்டேன் என்று தொண்டமான் பிரகடனம் செய்துள்ளார். தீர்வுப்பொதியில் எந்தவிதமான மாற்றங்கள் தெவையென்றோ அவை மலையக மக்களுக்கு எந்தவித பாதுகாப்பைத் தரும் என்றோ தொண்டமான் இதுவரை கூறவில்லை.

தொண்டமான் தீர்வுப்பொதிக்காகப் பிரச்சாரம் செய்யமாட்டேன் என்கிறாரே ஒளிய அரசாங்கத்தை ஆதரித்துக் கையுயர்த்த மாட்டேன் என்று கூறவில்லை.

சும்மா சொல்லக்கூடாது. தொண்டமானா? கொக்கா?

## ஐயா சாமி... நரிக்கொம்பிருக்கு வாங்கலியோ!

தமிழ்நாட்டு மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதற்கு எதிராக தமிழ்நாட்டில் எழுந்துள்ள கொந்தளிப்பிற்குப் பதில் சொல்லும் முகமாக இலங்கை அரசாங்கம் தத்தளிக்கும் நேரம் தமிழகத்து அரசியலின் கேடுகெட்டதன்மையின் மொத்த உருவமான சுப்பிரமணிய ஸ்வாமி இலங்கை அரசுக்கு ஆதரவாக திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார்.

அவரது கருத்துப்படி தாக்குதல்கள் அனைத்துமே இலங்கை கடற்படையினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களைக் கொண்டு கடற்படையினர் போல வேடம் பூண்ட விடுதலைப் புலிகளால் செய்யப்பட்டவை. இது இலங்கையரசின் செய்தி நிறுவனங்களினால் குதூகலத்துடன் வரவேற்கப்பட்டுள்ளது.

சுப்பிரமணிய ஸ்வாமி இந்திய உளவு, அயல் நாட்டின் தலையீடு நிறுவனமான றோவுக்கு நெருக்கமான ஒருவர். நல்ல காரியம் எதுவும் அவர் தொட்டு நடந்ததில்லை.

"குள்ளநரிக் கொம்மை
கோத்துப்போடு சாமி
புள்ளகுட்டிக்காச்சும் நல்ல
புத்திவரும்" என்ற பாட்டுத்தான் நினைவுக்கு வருகிறது.

## எஸ்.வி. ஆராய்ச்சியம்

ஈழத்தவர்கள் தமிழகம் பற்றி எழுதுவது எதுவும் தங்களுக்கு உடன்பாடாக இல்லாவிட்டால் தமிழக நிலவரம் ஈழத்தவர்களுக்கு விளங்காது என்று தட்டிக்கழிப்பது சில தமிழகத்து புத்திஜீவிகளின் உபாயங்களில் ஒன்று.

இடது தீவிர அரசியலில் தொடங்கி எக்ஸிஸ் டென்ஷலிசம், அந்நியமாதல் வழியே பயணம்செய்து இப்போது பெரியார் பக்தி இயக்கத்தில் சங்கமமாகியுள்ள எஸ்.வி: இராசதுரை ஈழத்துத் தமிழர் வரலாற்றையும் விட்டு வைக்வில்லை. பத்து, பன்னிரெண்டு வருடங்களின் முன்பு இடதுசாரிகள் மலையக மக்களது வாக்குரிமைகளைப் பறிக்க உதவினார்கள் என்று எழுதிய இந்த அறிஞர் இப்போது சரிநிகர் பத்திரிகையில் ஒரு புதிய கண்டுபிடிப்பை அறிவித்துள்ளார். வடக்கில் தாழ்த்தப்பட்ட சாதியினரின் போராட்டத்திற்கு வழிகாட்டியவர் ஈழத்தின் பெரியார் பக்தர்கள் தான் என்று அவர் ஒரு போடு போட்டிருக்கிறார். ஐயா! போகிற போக்கில் கார்ள் மாக்சுக்கு நாத்தியம் கற்றுக்கொடுத்தவர் ஈ.வெ. ராமசாமியாரின் பாட்டனார் என்று சொன்னாலும் அதிசயம் இல்லை.

## 'இந்து' பாரம்பரியமும் பாரதியும்

சென்னை "இந்து" பத்திரிகைக் குடும்பத்தின் சிவப்புக் கிளை "புறொண்ட் லைன்" அதன் ஆசிரியர் ராம். மாக்சிய கம்யூனிஸ்டு பிரமுகராகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ராம் புலி எதிர்ப்பு என்ற சாட்டில் ஈழத் தமிழரின் சுய நிர்ணயத்தை எதிர்ப்பவரும், காலஞ்சென்ற காமினி திசநாயக்காவுடைய நண்பனுமாவார். அவரது புறொண்ட் லைன் ஏடு இந்தியாவின் ஐம்பதாம் சுதந்திர நாள் சிறப்பிதழ் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதிலே இந்திய இலக்கியம் பற்றி சல்மான் ருஷ்டி எழுதிய கட்டுரையில் மட்டுமன்றி இந்திய விடுதலை பற்றிய எந்தக் கட்டுரையிலும் சுப்பிரமணிய பாரதியின் பேர் குறிப்பிடப்படவில்லை. பாரதி உயிரோடிருந்த காலத்தில் அவரை நிராகரித்த இந்து. பத்திரிகை நிறுவனம் வெள்ளையர் ஆட்சிக்கு தலையையும் காந்தியத்திற்கு வாலும் காட்டிக்கொண்டு தன்னை வளர்த்த ஒரு அமைப்பு. இந்த வியாபார மரபின் வழி வந்தவராகவே ராமும் அவரது ஏடும் தம்மை மேலும் மேலும் தெளிவாக அடையாளம் காட்டி வருகின்றமை பற்றி நாம் சினமடையத் தேவையில்லை. புறொண்ட் லைனின் மாக்சிய கம்யூனிஸ்டு, ஆதரவுத் தோற்றம் அதன் இந்து இந்திய மேலாதிக்கப் பார்வையை எத்தனை காலம் தான் மூடி மறைக்க முடியும்?

நன்றி - நூலகத்திட்டம்




# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

S - 47, 3வது மாடி
கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி
கொழும்பு - 11
தொலைபேசி :435117, 335844


## ஜனாதிபதியின் அறைகூவல்

வரலாற்றுப் பெருமை மிக்க அனுராதபுரத்திலிருந்து கடந்த 25.08.97 அன்று சமாதான செய்தி அடங்கிய உரை ஒன்றினை ஜனாதிபதி திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரணதுங்கா ஆற்றியிருக்கிறார். அவ் உரையில் இனப்பிரச்சினை தீர்க்கப்படுவதன் அவசியம், தீர்வுத்திட்டத்தின் தேவை, தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகள் பிரச்சினை தீர்க்கப்படாது விடின் தமிழர் போராட்டம் தொடரும் போன்ற கருத்துக்களைக் கூறியிருந்தார். அவற்றில் வரவேற்கத்தக்க கருத்துக்கள் இருந்தன.

அதேவேளை ஜனாதிபதியின் உரையில் முரண்பாடான கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன. இந்த நாடு ஒரு பௌத்த சிங்கள நாடு என்று கூறியிருந்தார். பின்பு ஒரே தேசம், ஒரே மக்கள், இலங்கையர்கள் என்ற உணர்வுக்கும் நிலைக்கும் வரவேண்டும் எனத் தனது உரையில் குறிப்பிட்டார். இதன் அர்த்தம் எதைச் சுட்டி நிற்கிறது என்பது புரியவில்லை. இலங்கையின் இன்றைய யதார்த்தம் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலையகத் தேசிய இனங்கள் வாழ்ந்து வருவதுடன் பறங்கியர், மலேயர், வேடர் ஆகிய சிறுபான்மை சமூகத்தவர்கள் இருக்கக் காண்கிறோம். இவர்கள் அனைவருக்கும் இனமொழி மத கலாச்சார, வாழ்விடத் தனித்துவங்கள் தன்னடையாளங்கள் என்பன உள்ளன. இவர்களில் சிங்கள தேசிய இனத்தின் மத்தியில் உள்ள பேரினவாத மதவெறி சக்திகள் ஏனைய தேசிய இனங்களின் இருப்பையோ அன்றி அவர்களுக்குரிய உரிமைகளையோ மதிக்க அன்றி ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை.

அத்தகைய பேரினவாதப் போக்கின் தொடர்விளைவானதே இன்றைய இனப்பிரச்சினையும் இன யுத்தமுமாகும். இத்தகைய ஒரு நெருக்கடிகளும், யுத்த சூழலும் அவற்றுக்குரிய முறையான தீர்வும் முன்னெடுக்கப்படாத நிலையில் ஒரே தேசம் ஒரே மக்கள் நாம் இலங்கையர் என்பதன் அர்த்தம் எனக் குறிக்கிறது. எல்லாத் தேசிய இனங்களும் தத்தமது தனித்துவம் தன்னடையாளங்களை கைகழுவிக் கொள்ள வேண்டுமா? எல்லோரும் சிங்கள தேசிய இனத்துனுள் சங்கமமாகி ஒரே தேசிய இனமாகிக் கொள்வதா? அல்லது இலங்கையர் என்ற பெயரின் கீழ் எந்தவிதமான உரிமைகளையும் வற்புறுத்தாது அல்லது பெற்றுக் கொள்ளாது இருந்து விட வேண்டுமா? ஜனாதிபதி இந்தியாவை உதாரணம் காட்டியுள்ளார். நூற்றுக்கு மேற்பட்ட மொழிகளையும் இனங்களையும் கொண்ட இந்தியாவில் இந்தியர்கள் என்ற உணர்வு மேலோங்கி இருப்பதாக சுட்டிக் காட்டி உள்ளார். இந்தியர்கள் என்னும் உணர்வு சாதாரணமாக ஏற்ப்பட்ட ஒன்றல்ல. நூறாண்டுகளுக்கு மேலாக காலனி ஆதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக நடாத்திய இந்திய மக்களின் சுதந்திரப் போராட்ட உணர்வில் இருந்து பிறந்தாகும். வெள்ளையனே வெளியேறு என்னும் சுதந்திரத் தாகத்தின் வீறு பெற்ற வெளிப்பாடுதான் இந்தியர்கள் என்ற உணர்வு. அங்கேயும் கடந்த ஐம்பது ஆண்டு கால சுதந்திரத்தின் பின் இந்தியர்கள் என்ற உணர்வு தேய்ந்து வருவதைக் காணமுடிகிறது. அங்கும் இன மத மொழி பிரதேச தனித்துவங்கள், தன்னடையாளங்கள் மதிக்கப்படாது மறுக்கப்படும் சூழல்களின் வளர்ச்சியால் இந்தியர்கள் என்ற உணர்வை எந்தளவுக்கு காப்பாற்ற முடியும் என்பது இன்று கேள்விக்குரிய தாக்கி நிற்கிறது.

ஆதலால் ஒரே தேசம், ஒரே மக்கள், சிங்கள பௌத்த நாடு என்பது போன்ற முழக்கம் அர்த்தமற்றவையும் ய்தார்த்திற்கு எதிர்மாறானதுமாகும். இலங்கை பல இன மத மொழி கலாச்சாரங்களையுடைய பல்லினநாடு என்பதே யதார்த்தமும் உண்மையுமாகும். தேசிய இனங்களினதும் சிறுபான்மை சமூகங்களினதும் தனித்துவ தன்னடையாளங்களை மதித்து ஏற்றுக் கொண்டு அவர்களுக்குரிய சுயாட்சி உரிமைகளை வழங்கும் அரசியல் தீர்வினாலும் உரிய நடைமுறைகளாலுமே எதிர்காலத்தில் நாம் இலங்கையர் என்ற உணர்வுக்கு செல்ல முடியும். அதனை வெறும் செயற்கையான செயல்களால் கட்டியெழுப்ப முடியாது. மிகக் கடினமானதும் பொறுப்பு மிக்கதுமான தீர்வுக்கான நடைமுறைகளாலே முன்னெடுக்க முடியும். அது எதிர்காலத்திற்குரியதே அன்றி நிகழ்காலத்திற்குரிய ஒன்றல்ல.

ஆசிரியர் குழு

# விலைகள் அதிகரிப்பால் மக்கள் வயிற்றில் அடி !

அண்மையில் மா, பாண், சீனி என்பனவற்றின் விலைகள் அடுத்தடுத்து அதிகரிக்கப்பட்டன. அதன் மூலம் அரிசி முதல் மரக்கறி வரையான சகல அத்தியாவசியப் பண்டங்களும் விலை அதிகரிப்பினைப் பெற்றுக் கொண்டன. அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று ஆண்டுகளைப் பூர்த்தி செய்து கொண்ட சூழலிலேயே இவ்வாறு தலையில் அடித்தாற் போன்று விலை உயர்வுகள் ஏற்பட்டன. அரசாங்கம் மூன்றாவது ஆண்டுப் பூர்த்தியை சற்று கோலாகலத்துடன்தான் நடாத்த எண்ணியிருந்தது. அதற்கு வசதியாக கிறிக்கட், மெய்வல்லுனர் சாதனைகளும் ஏற்பட்டிருந்தன. இருப்பினும் இவ் அலையின் மத்தியில் ஆட்சியின் சாதனைகளைப் பிரச்சாரம் செய்வதா அல்லது விலை உயர்வைக் கொண்டு வருவதா என்பதில் ஆட்சியாளர்களின் மத்தியில் குழப்பம். இரண்டையும் ஒன்றாகச் செய்ய முடியாது என்பதால் விலை உயர்வைக் கொண்டு வந்தார்கள். இது கிறிக்கட்டை ரசித்து அதனுள் மூழ்கி நின்ற மக்களுக்கு மட்டுமன்றி நாட்டின் சகல மக்களுக்குமே கடுமையான அடியாகியது. மா, பாண், சீனி என்பன சாதாரண அடிமட்ட மக்கள் தொட்டு மத்தியதர வர்க்கம் வரையான ஏகப் பெரும்பான்மையான மக்களின் அன்றாட பாவனைப் பொருட்களாகும். இவற்றுக்கு விலை அதிகரித்தால் ஏனைய அத்தியாவசியப் பொருட்களுக்கு விலைகள் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட மாட்டாது. ஏனெனில் அவை இயல்பாகவே ஏறிக் கொள்ளும் . மாவின் விலை அதிகரிப்புக்கு அரசாங்கம் கூறியுள்ள காரணம் தான் சிரிப்பை ஏற்படுத்துகிறது. அரிசிப் பாவனையை அதிகரிக்கவும் மக்களின் உணவுப் பழக்கத்தில் மாற்றத்தைக் கொண்டு வரவும் தான் மாவின் விலை அதிகரிக்கப்பட்டதாம். அப்படியானால் அரிசியின் விலை என்ன? அல்லது அரிசியில் தன்னிறைவு காணப்பட்டு விட்டதா? அல்லது அரிசி தேங்கி வீதியில் குறைந்த விலையில் விற்கப்படுகின்றதா? இன்று ஒரு கிலோ மா இருபது - இருபத்தி மூன்று ரூபா வரை விற்கப்படுகின்றது. பாண் பத்து - பதினொரு ரூபா வரை விற்கப்படுகின்றது. சீனி முப்பத்தைந்து வரை விற்கப்படுகின்றது. இவற்றுக்குக் கட்டுப்பாடே இல்லை. அதேவேளை அரிசியின் விலை இருபத்தெட்டில் இருந்து முப்பத்து மூன்று ரூபா வரை விற்கப்படுகின்றது. அரிசி விலை இவ்வாறு இருக்கும்போது எந்த முட்டாளாவது மாவிற்குப் பதிலாக அரிசி வாங்குவானா? அரசாங்கம் பொய்யைச் சொன்னாலும் பொருந்தச் சொல்ல வேண்டும். எப்படிச் சுற்றி வளைத்தாலும உண்மை என்னவெனில் இன்று அரசாங்கம் நடாத்தி வரும் யுத்தத்திற்கு தீனி போட மக்களின் வயிற்றில் அடித்து பணத்தைப் பறித்துக் கொள்கிறது.

உள்நாட்டு உற்பத்தியைப் பற்றி அக்கறையோ அனுதாபமோ, அற்ற நிலையிலேயே மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு ஏன் மரக்கறிகளைக்கூட வெளிநாடுகளில் இருந்து தாராளமாக இறக்குமதி செய்ய உள்ளூர் பெரும் முதலாளிகளுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கி நிற்கின்றது. தமது உற்பத்தியான மிளகாயை நியாயமான விலை கொடுத்து வாங்குமாறு விவசாயிகள் முழக்கம் செய்து மறியல் போராட்டம் நடாத்திக் கொண்டிருக்க கொழும்புத் துறைமுகத்தில் இருந்து லொறிலொறியாக செத்தல் மிளகாய் இறக்குமதியாக்கப்பட்டு பெரு முதலாளிகளின் கட்டிடங்களில் விலையேற்றங்களுக்காக முடக்கி வைக்கப்படுகின்றது. எப்பாவள எனும் இடத்தில் எதிர்ப்புத் தெரிவித்து விவசாயிகள் மிளகாயை வீதியில் எரித்த போது சூழல் மாசுபடக் காரணமானவர்கள் எனக் கூறி பொலிஸாரால் அவ்விவசாயிகள் கைது செய்யப்பட்ட சம்பவமும் இடம் பெற்றது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திடம் எதிர்பார்த்த அளவுக்கு அது தனது பொருளாதாரக் கொள்கையைக் கொண்டிருக்கவில்லை என்பதைக் கடந்த மூன்று ஆண்டுகள் நிரூபித்து விட்டன. உள்நாட்டு உற்பத்தி பற்றி இந்த அரசாங்கம் கடந்த ஆட்சியின் தொடர்ச்சியைத் தான் பின்பற்றி நிற்கின்றது. உற்பத்தியாளர்களைப் பாராமுகத்துடன் நடாத்தி வரும் அரசாங்கம் நுகர்வோர்களையிட்டும் அக்கறை கொள்ளவில்லை. தாராள இறக்குமதிகள் மூலம் பெருமுதலாளிகளின் பைகள் நிரம்புவதற்கான வாய்ப்பு வசதிகளைச் செய்து விடும் அரசாங்கம் அமைச்சர்கள், அதிகாரிகள் மறைமுக வழிகளில் கொமிசன் பெறும் தொகையில் பெற்று வருவதையிட்டு கண்களை இறுக மூடிக் கொண்டுள்ளது

இன்று நடுத்தர சிறு உற்பத்தியாளர்கள் மட்டுமன்றி அதே தரத்தில் இருந்துவந்த சிறுமுதலாளிகள் வியாபாரிகள் யாவரும் இன்று நிலைகுலைந்து போய் உள்ளமையைக் காண முடிகின்றது.

இன்று நாட்டின் நாலாபுறமும் தொழிலாளர்கள் விவசாயிகள் அவல வாழ்வுக்குள் தள்ளப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வில் மாவும் சீனியும் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவர்களது உயிர் வாழ்வைப் பிடித்து வைத்திருப்பதே இந்த மாவுதான். சம்பள உயர்வு இல்லை. வேலை நாட்கள் குறைவு. எல்லோருக்கும் வேலை வழங்க மறுப்பு போன்ற நெருக்கடிகளின் மத்தியில் மாவின் விலை அதிகரிப்பு அவர்களுக்குப் பேரிடி என்பதில் ஐயமில்லை.

அமெரிக்காவின் ஆலோசனை வழிகாட்டலுக்கு இணங்க யுத்தம் நீடிக்கப்படுகின்றது. யுத்தத்திற்கு நாளாந்தம் கோடிக் கணக்கில் தீனியிடப்படுகின்றது. ஆயுதமாக, வெடி மருந்தாக, ராணுவத் தளபாடங்களாக ராணுவ உணவாக, சம்பளமாக, மேலதிகக் கொடுப்பனவுகளாக ஊழலாக லஞ்சமாக இப்படிப் பல பத்து வழிகளில் நாட்டு மக்களின் பணம் யுத்தத்தில் அள்ளி இறைக்கப்படுகின்றது. இந்தப் பணம் ஜனாதிபதியின் முதுசப் பணமோ அல்லது பாதுகாப்பு அமைச்சரின் சீதனப் பணமோ அல்ல. இந்த நாட்டு மக்கள் அனைவரினதும் பணமாகும். அது குறையும் போதே நேரடியாகவோ மறைமுகமாகவோ மீண்டும் மீண்டும் மக்களிடமிருந்து எடுக்கப்படுகின்றது. அல்லது கட்டாயமாகக் , கறக்கப்படுகின்றது. யுத்தத்திற்கு மட்டுமன்றி ஆட்சியில் பங்குபற்றுவோரின் தேவைக்கு அப்பாற்பட்ட தேவைகள் என்பனவற்றுக்கு எல்லாம் நாட்டு மக்களே பணம் கொடுத்து வருகிறார்கள். அவற்றில் குறைவுகள் ஏற்படுவதை நிவர்த்தி செய்ய மீண்டும் மீண்டும் விலை அதிகரிப்புகள் ஆட்சியினருக்கு அவசியப்படுகின்றன. மூன்று ஆண்டுகளுக்கு முன்பு கொடுத்த வாக்குறுதியாவது மண்ணாங்கட்டியாவது. அதை விட்டுத் தள்ளு. இப்போது எடு என்பதாகவே ஆட்சியின் விலையேற்றம் கூறுகின்றது. ஐந்து ரூபா பாணின் விலையை மூன்று ரூபா ஐம்பது சதமாக்கி கணநேரக் கவர்ச்சி காட்டிய அரசாங்கம் இன்று பத்து ரூபாய் வரை கொண்டு வந்து விட்டுள்ளது மக்களை விரக்தியடையவே செய்துள்ளது.

இன்றுள்ள மக்களது விரக்தி நிலையை எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி தனக்கு சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றது. ஆனால் மக்கள் அதனைப் பெரிதுபடுத்துவதாக இல்லை. ரணிலும் அவரது சகபாடிகளும் வானத்தில் இருந்து குதித்து மக்களை ரட்சிக்க வந்த தேவ தூதர்கள் இல்லை என்பதை மக்கள் நன்கு அறிவர். அவர்களின் கடந்த காலத்தின் கறைகளை மக்கள் இலகுவில் மறந்துவிட மாட்டார்கள். அதனாலேயே அண்மையில் அவர்கள் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்க முனைந்த எதிர்ப்பு இயக்கம் பிசுபிசுத்துக் கொண்டது. இதன் அர்த்தம் மக்கள் அரசாங்கத்தின் பக்கம் உள்ளனர் எனச் சில அமைச்சர்கள் கதைகட்டப் பார்க்கின்றனர். ஆனால் உண்மையாதெனில் மக்கள் விரக்தியடைந்து எதிர்காலம் பற்றிய நம்பிக்கையீனத்திலேயே இருக்கிறார்கள். இது அரசாங்கத்தின் வாக்குறுதிகளின் இயலாமையால் ஏற்பட்ட ஒன்று மட்டுமன்றி பொதுவாகவே நாட்டின் அரசியல் பொருளாதாரத்துறையில்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

# பேச்சுவார்த்தையில்

# அரசாங்கம் - எல்.ரீ.ரீ.ஈ - ஐ.தே.க

இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டமெதுவும் தமிழ் மக்களினதும், முஸ்லிம் மக்களினதும் மலையக மக்களினதும் சிங்கள மக்களினதும் ஆதரவின்றி நடைமுறைப்படுத்த முடியாது. தமிழ் மக்களின் ஆதரவு என்பது எல்.ரீ.ரீ.ஈ உட்பட சகல தமிழர் கட்சிகளினதும் இயக்கங்களினதும் உடன்பாடு அவசியம் என்பதாகும்.

மலையக மக்களினது உடன்பாடு என்பது அம்மக்களின் எல்லா அமைப்புகளினது உடன்பாட்டை



யும் குறிக்கும். முஸ்லிம் மக்களினது ஆதரவு என்பது முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம்கட்சி உட்பட சகல முஸ்லிம் அமைப்புகளினதும் ஆதரவாகும்.

சிங்கள மக்களினது அங்கீகாரம் என்பது சிங்கள மக்களின் கட்சிகளினதும் அமைப்புகளினதும் அங்கீகாரம் என்பதாகும். குறிப்பாக பொது ஜன ஐக்கிய முன்னணியினதும் ஐ.தே.கட்சியினதும் உடன்பாடு என்பது மிகவும் அடிப்படையானதாக அமையும்.

ஆனால் எல்.ரீ.ரீ.ஈ. எதிர்த்தாலும், ஐ.தே.கட்சி எதிர்த்தாலும் மக்களின் ஆதரவுடன் அரசாங்கத்தின் தீர்வுத்திட்டம் சட்டமாக்கப்படும் என்று நாட்டு மக்களின் கேள்விகளுக்கு தொலைக்காட்சியில் தோன்றி பதிலளித்த ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

எல்.ரீ.ரீ.ஈ. யுடனும் ஏனைய தமிழர் அமைப்புகளுடன் உடன்பாடு ஏற்படாதவிடத்து குறிப்பிட்ட தீர்வுத்திட்டம் சட்டமாக்கப்பட்டாலும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதாகவோ, நடைமுறைப்படுத்தக் கூடியதாகவோ இருக்காது.

பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு இல்லாதபடியால் ஐ.தே.கட்சியின் ஆதரவின்றி உத்தேச தீர்வுத்திட்டத்தை சட்டமாக்க முடியாது.

எனவே பாராளுமன்றத்தில் வல்லமையுள்ள ஐ.தே.கட்சியின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், இராணுவ வல்லமையுடைய எல்.ரீ.ரீ.ஈ.யின் நிராகரிப்புக்கு மத்தியிலும் தீர்வுத்திட்டம் உயிர்ப்புடன் இருக்குமா என்பது பற்றி ஆராய்ச்சிகளை நடத்தத் தேவை இல்லை.

இதனை ஜனாதிபதி அறியாதவரல்லர். எனினும் பிழையான அணுகுமுறைகளை முன்னெடுத்துச் செல்கின்ற போது தேவையற்றவாறு எதிர்ப்புகளை ஏற்படுத்திக் கொள்வது தவிர்க்க முடியாதது.

தமிழ் மககளின் இனப்பிரச்சினைக்கு நேர்மையாக தீர்வு காண வேண்டுமென்ற விரும்பினால் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டுமானால் எல்.ரீ.ரீ.ஈயுடன் பேச்சுவார்த்தை நடத்துவது இன்றியமையாததாகும்.

எல்.ரீ.ரீ.ஈயுடன் பேசுவதற்கு முன்னர் தமிழ் மக்களின் ஆக்குறைந்த தேசிய அபிலாஷைகளை யாவது பூர்த்தி செய்யக்கூடிய வகையில் தீர்வுத்திட்டமொன்றை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

அதனடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான சூழ்நிலையை ஏற்படுத்த ஏதுவாக இன்றைய யுத்தத்தை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

யுத்த நிறுத்தத்தை அவதானிக்கவும், பேச்சுவார்த்தையை அவதானிக்கவும் தேசிய, சர்வதேச பிரஜைகளின் மத்தியத்துவம் தேவைப்படின் பெறப்படலாம். யுத்த நிறுத்த வேளையில் முறிவுகள் ஏதும் ஏற்படினும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்துவதென முன்பதாகவே உறுதியான முடிவை எடுத்துக் கொள்ள வேண்டும்.

எல்.ரீ.ரீ.ஈ யுடன் பேச வேண்டும் என்பதில் ஐ.தே.கட்சிக்கு அபிப்பிராய பேதமில்லை. ஐ.தே.கட்சியின் சிரேஷ்ட தலைவர்களான ஹமீது, றொனி டி மெல் ஆகியோர் எல்.ரீ.ரீ.ஈ யுடன் அரசாங்



கம் பேச வேண்டும் என்றே விரும்புகின்றனர். ஆனால் எல்.ரீ.ரீ.ஈயுடன் பேசும் விடயங்களை தமக்கு அறிவிக்க வேண்டும் என்பதையே எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகிறார். எல்.ரீ.ரீ.ஈ யுடன் பேசும் விடயங்களுக்கு பொறுப்பெடுக்க ஐ.தே.கட்சி தயாரில்லை என்பது இதனால் தெளிவாகிறது.

எனவே எல்.ரீ.ரீ.ஈ க்கும் அரசாங்கத்துக்குமிடையில் இருக்கும் இடை வெளியையும் ஐ.தே.கட்சிக்கு அரசாங்கத்துக்குமிடையில் இருக்கும் இடைவெளியையும் சமமானதாக அரசாங்கம் கொள்ளக் கூடாது. அரசாங்கத்துக்கும் ஐ.தே.கட்சிக்குமிடையிலான இடைவெளி இரண்டாம் பட்சமானதே ஆகும். ஏனெனில் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வு திட்டத்தை முன்வைத்து எல்.ரீ.ரீ.ஈ. யின் இணக்கத்துடன் தீர்வுத் திட்டம் இறுதியான வடிவமைக்கப்படின் இந்நாட்டு மக்களின் அபிப்பிராயத்தை ஆதரவைத் திரட்டமுடியும். ஆதரவாக அபிப்பிராயம் திரட்டப்பட்டால் ஐ.தே. கட்சியின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

இறுதியில் பாராளுமன்றத்தில் சட்ட மாக்குவதற்காகவே ஐ.தே. கட்சியின் ஆதரவு அவசியமாகிறது. தமிழ் மக்களின் அபிலாஷைகளை அங்கீகரிக்கும் தீர்வுத்திட்டமொன்றை வகுக்கவும், அதனை நடைமுறைப்படுத்தவும் தேவையான சாதகமான, சூழ்நிலையும், அதனை பாராளுமன்றத்தில் சட்டமாக்குவதற்கு சாதகமான சூழ்நிலையும் ஒரே நேரத்தில் சமமாக இடத்தைப் பிடிக்க முடியாது.

அந்தவகையில் எல்.ரீ.ரீ.ஈ க்கும் அரசாங்கத்துக்குமிடையிலான இடைவெளி நிரப்பப்படுமாயின் (அல்லது குறைக்கப்படுமாயின்) ஐ.தே.கட்சிக்கும் அரசாங்கத்துக் குமிடையிலான இடைவெளியை நிரப்ப (அல்லது குறைக்க) வாய்ப்புகள் அதிகமாகவே இருக்கும்.

ஐ.தே.கட்சிக்கும் அரசாங்கத்துக் குமிடையிலான இடைவெளியை நிரப்புவதை (அல்லது குறைப்பதை) முதன்மையான விடயமாக கொண்டால் அரசாங்கம் தமிழ் மக்களுடைய அபிலாஷைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுத் திட்டத்தை ஆக்க முடியாது: தீர்வுத்திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் மறுக்கப்பட முடியாத முக்கியப்பங்கு வகிக்கும் எல்.ரீ.ரீ.ஈ யுடன் இணக்கப்பாட்டுக்கு வரவும் முடியாது. இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும்.

ஆனால் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத்திட்டமொன்று வகுக்கப்பட்டு விட்டால், ஐ.தே.கட்சி அதற்கு எதிராக இருப்பினும் அதனை வெற்றி கொள்



வதற்கு தீர்வுத்திட்டத்துக்கு சார்பான பொதுமக்கள் அபிப்பிராயத்தை ஏற்படுத்த வேண்டும். தீர்வுதிட்டத்துக்கு ஆதரவான பொதுமக்கள் அபிப்பிராயத்தினால் ஐ.தே.கட்சியின் எதிர்ப்பை வெற்றி கொள்ள முடியும். பொதுமக்களின் அபிப்பிராயத்தினூடே ஐ.தே.க. விற்கு வற்புறுத்தலை, அழுத்தத்தை கொடுத்து (இணக்கம் காணப்படும்) தீர்வு திட்டத்தை ஆதரிக்கச் செய்ய முடியும்.

ஐ.தே.கட்சி தொடர்ந்து எதிர்ப்பை தெரிவிக்குமாயின் பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட சூழ்நிலையோ டட்லி - செல்வநாயகம் உடன்படிக்கை வாபஸ்பெறப்பட்ட சூழ்நிலையோ இன்று இல்லை. ஏனெனில் தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப்போராட்டம் நடைபெறுகிறது. யுத்தம் முழுநாட்டையுமே அழுத்துக் கொண்டிருக்கிறது. அத்துடன சிங்கள மக்களின் மன நிலையிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

எனவே எல்.ரீ.ரீ.ஈ இற்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான இடைவெளி நிரப்பப்படுமாயின் (அல்லது குறைக்கப்படுமாயின்) யுத்தத்தை நிரந்தரமாக நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் பாராளுமன்றத்தில் நிறைவுடைய தீர்வு திட்டத்தை சட்டமாக்குவதில் சிரமங்கள் அதிகம் இருக்க மாட்டாது.

# எனது மகளை பாதுகாப்பது எப்படி? ஒரு அப்பாவின் கடிதம்

மூன்றாம் வகுப்பு படிக்கின்ற எனது எட்டு வயது மகள் பாடசாலைக்கு வேனில் போய்வர மாட்டேன் என்கிறாள். அப்பாவோ, அம்மாவோ பாடசாலைக்கு கூட்டிக் கொண்டுப் போய் விட்டுவிட்டு கூட்டிக் கொண்டு வரவேணும் என்கிறாள். அவள் இதுவரை பாலியல் வல்லுறவுக்கு ஆளாகவில்லை என்றாலும் அப்பாவினதோ, அம்மாவினதோ பாதுகாப்பு இல்லாமல் எங்காவது போனால் பாலியல் வல்லுறவுக்கு ஆளாகிவிடுவாள் என்று பயப்படுகிறாள்.

தினமும் தான் பாலியல் வல்லுறவு பற்றி குறைந்தது இரண்டு மூன்று செய்திகளை பத்திரிகைகள் வெளியிடுகின்றனவே. அதை அவளும் வாசிக்கிறாள். ரீ.வியில் பாலியல் வல்லுறவு பற்றி நாடகங்கள் காண்பிக்கப்படுகின்றன. அதுபற்றி வீட்டிலும் கதைக்காமல் இருக்க முடியவில்லை. அயலிலும் அதைப் பற்றிக் கதைக்கிறார்கள். இதனால் தானும் எந்தவொரு ஆணாலும் பாலியல் வல்லுறவிற்கு ஆளாக்கப்படலாம் என்று எனது மகள் அஞ்சுகிறாள் என்று எனக்குத் தெரிகிறது.

எனது மனைவி ஒரு பெண்ணியல் வாதியாக இருந்திருந்தால் ஆணாதிக்கத்தின் வெளிப்பாடே பாலியல் வல்லுறவு என்று கூறிவிட்டு சும்மா இருந்திருக்கக் கூடும்.

எனக்கு மகள் இல்லாதிருந்தால் இவை சமூக சீர்கேடுகள், சமூகத்தை மாற்றியமைத்தால் பாலியல் வல்லுறவுகள் இடம்பெறாது என்று கூறிவிட்டு நானும் சும்மா இருந்து விடலாம்.

பட்டமேற்படிப்பை மேற்கொண்டிருந்தாலோ, என்.ஜீ.ஓ. வில் வேலை செய்தாலோ பாலியல் வல்லுறவை ஆய்வுக்குரிய ஒரு விடயமாக தேர்ந்தெடுத்திருக்கலாம்.

நீதவான்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் உயர் அதிகாரிகள், பாடசாலை வேன் டிரைவர்கள் சிறுமிகளை பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியதாக செய்திகள் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. தந்தைமார் மகள்மாரை பாலியல் வல்லுறவுக்குட்படுத்தியதாகவும் செய்திகள் வெளிவந்தது கொண்டிருக்கின்றன.

பாலியல் வல்லுறவுக்கான காரணத்தை ஆழமாக என்னால் கண்டுபிடிக்க முடியாவிட்டாலும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக இலங்கையில் பாலியல் வல்லுறவுகள் அதிகரித்துள்ளன என்பதை என்னால் விளங்கிக் கொள்ள முடிகிறது.

பாலியல் வெறியைத் தூண்டும் பத்திரிகைகள், புத்தகங்கள் தாராளமாக எமது நாட்டில் தற்போது கிடைக்கின்றன. அதிகமான ரீ.வி நாடகங்கள், படங்கள் என்பவையும் அவ்வெறியை தூண்டுவனவாகவே அமைந்துள்ளன.

இன்றைய உலகளாவிய திறந்த பொருளாதார முறைமையின் தாக்கத்தினால் தனிமனிதன் பொருளாதார சுமை கூடி விரக்தியடைந்தவனாகவே இருக்கிறான். பாலியல் உறவினை குடும்பநிறுவனத்துக்கு உட்பட்ட விடயமாகவன்றி, வியாபாரமாக, பொழுதுபோக்காக வைத்திருக்க முடியும், வேண்டும் என்ற கருத்தியல் மிக வேகமாகவே பரவியுள்ளது.

இந்நிலையில் பாடசாலை மாணவர்களுக்கும் பாலியல் கல்வியை போதிக்கப் போவதாக எமது அரசாங்கமும் அறிவித்துள்ளது.

பாலியல் பற்றிய அறிவு என்பது பாலியல் வல்லுறவை செய்து விட்டு எவ்வாறு சட்டத்தின் கண்களில் மண்ணைத் தூவலாம் என்பதற்கான ஆலோசனையாக புகட்டப்படக்கூடாது; கற்கவும் கூடாது. வயிற்றில் பிள்ளை வராமல் அல்லது பாலியல் நோய் வராமல் குடும்பநிறுவனத்திற்கு வெளியில் தாராளமாக, கட்டுப்பாடற்ற வகையில் பாலுறவை மேற்கொள்வது எப்படி என்பதற்காக பாலியல் கல்வி போதிக்கப்படலாகாது.


பாலியல் ஒழுக்கத்தை நிலை நாட்டுவதற்கான அறிவை, சிறுவர்களுக்கு மட்டுமன்றி இந்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

நன்றி - நூலகத்திட்டம்



# போடைஸ் தோட்டத்தில் நடந்தது இதுதான்..




தோட்ட தனியார் மயமாக்களின் பின் கம்பெனிகள் தொழிலாளரை பெயர் பதியாமை இன்று எல்லா தோட்டங்களிலும் நாம் காணக் கூடிய ஒரு விடயமாகும். முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் முக்கிய ஆயுதமாகிய தொழிலாளர் குறைப்பின் பூரண செயற்பாட்டிற்கு எதிராக மக்கள் கிளர்ந்து எழுதுவது புதியதல்ல எனினும் மக்களின் ஒற்றுமையையும் காட்டத்தக்கதாக அமைந்தது.

போடைஸ் தோட்டத்தில் புதிதாக தொழிலாளர் பேர் பதிவதற்கான 50 வயதுக்கு மேற்பட்ட 60 தொழிலாளர்களை வேலையிலிருந்து ஒய்வு வழங்கி 60 இளைஞர் யுவதிகளுக்கு பெயர் பதிவதாக வாக்கு கொடுக்கப்பட்டது. இதன் பின் அனைத்து இளைஞர் யுவதிகளிடமிருந்தும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட போம் ஒன்றில் ஒப்பம் வாங்கிக் கொண்டு 60 தொழிலாளருக்கும் ஓய்வு வழங்கப்பட்டது. 50 வயதிற்கு குறைந்தவர்களும் ஓய்வு பெற்றார்கள். 6 மாதங்களாக எவருக்கும் புதிதாக வேலை வழங்கப்படவில்லை. அதன்பின் மீண்டும் மக்கள் தோட்ட முகாமையாளரிடம் கேட்டதைத் தொடர்ந்து மிகவும் கஸ்டப்படும் குடும்பங்களின் பிள்ளைகள் 16 பேருக்கு மாத்திரம் வேலை வழங்கப்பட்டது. இதனால் மக்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் மே மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு 4 ஆம் திகதி வரை நடைபெற்றது. 5ஆம் திகதி தோட்ட முகாமையாளர் 16 வயது முதல் 22 வயது வரையுள்ள அனைவருக்கும் வேலை வழங்குவதாக கூறியதுடன் கொழும்பில் வேலை செய்பவர்களுக்கும் வேலை வழங்குகிறேன் என்று வாக்கு கொடுத்தார். 72 பிள்ளைகளுக்கு வேலை வழங்கப்பட்டது மே மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி வரை தொழில் வழங்கப்பட்டது எனினும் 28 ஆம் திகதி புதிதாக பேர் பதிந்தவர்களுக்கு வேலை நிறுத்தப்பட்டது.

பிறகு தோட்ட முகாமையாளர் 30 பேருக்கு மாத்திரம் தான் வேலை தருவதாக கூறினார். கம்பனிகளுக்கும் தோட்ட முகாமையாளருக்கும் எதிராக மீண்டும் வேலை நிறுத்தப்போராட்டம் தொடங்கப்பட்டது. இதை சீர்குழைப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஒரு சிலர் கற்கள் எறிந்தும், பொலீசில் புகார் செய்தும், வேலைக்கு சென்றும் போராட்டத்தை முறியடிப்பதற்கான செயல்களை செய்தனர். இதற்கு முக்கியமான காரணம் தொழிற்சங்கங்களின் பிழையான வழிகாட்டல் தான் என்பது தெட்டத் தெளிவாக தெரிகின்றது. 09 ஆம் திகதி முதல் 3 டிவிசன்களும் சேர்ந்து 600 தொழிலாளர்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இவர்களின் இந்த தொடர்ச்சியான வேலை நிறுத்தத்திற்கு அட்டன், டிக்கோயா, புளியாவத்தை போன்ற நகரங்களின் ஒரு சிலவர்த்தகர்களும் போட்ரி தோட்ட பங்கு தந்தை அவர்களும் அட்டன் பிரதேசத்தில் இருக்கும் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றும் பொருளாதார ரீதியாகவும் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு பல ஆலோசனைகளையும் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் முக்கியமான விடயம் அனைத்து தொழிலாளர்களும் தோட்ட கோவிலில் வந்து இரவு பகலாக தூங்காமல் இருந்து சமைத்து அனைவரும் பகிர்ந்து உண்டு தங்கள் போராட்டத்தில் ஒரு புதிய அம்சத்தை அறிமுகப்படுத்தினர். இதில் இரவு பகலாக இரு பாலாரும் தங்கள் கைக்குழந்தைகளுடனும் வெயிலிலும், மலையிலும் தங்கள் போராட்ட குணத்தின் வலிமையை காட்டுவதற்காக பங்கெடுத்தனர்.

இந்த வேலை நிறுத்த போராட்டம் சம்பந்தமாக இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவரும் கால் நடை அபிவிருத்தி, பெருந்தோட்ட உள்ளக கட்டமைப்பு அமைச்சருமான எஸ்.தொண்டமானை தொழிலாளர்கள் சந்தித்தபோது அனைத்து தொழிலாளர்களையும் தங்கள் தங்களுடைய தொழிற்சங்கத்திற்கு சேருவதற்கு போம் நிரப்பி தந்து விட்டு வேலைக்கு சென்றால் ஒரு மாதத்தின் பின் பிரச்சனையை தீர்ப்பதாக கூறி இருக்கின்றார். பா.ம.உ. திரு ஆறுமுகம் தொண்டமான் மக்கள் வேலைக்கு செல்லாவிட்டால் அடித்து வேலைக்கு அனுப்புவேன் என்றும் கூறியிருக்கின்றார். இவர்களின் இது போன்ற காட்டிக் கொடுப்புக்கள் புதியவை அல்ல எனவே தொழிலாளர்கள் இந்த விடயங்களை பெரிதுபடுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வேலை நிறுத்த போராட்டத்திற்கு தோட்டங்களிலிருந்த கல்வி கற்றவர்கள் எந்தவித

(தொடர்ச்சி பக்கம் 07 இல்)

## இங்கேருங்க இத கோஞ்சங் கேளுங்க

*மலையகத்தில் வாக்காளர் பதிவு ஒரு கேலிக்கூத்து.*
*''மலையகத்தமிழருக்கு அடையாள அட்டை குதிரைக்கொம்பு''*

முத்துலிங்கம், தினக்குரல் 08.08.97

* * *

*தோட்டப்பகுதி இளைஞர்கள் பாதுகாப்புக் கெடுபிடிகளால் தோட்டங்களிலேயே முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை உள்ளது. அவர்களது தாய், தந்தையருக்கு பாரமாக இருக்க வேண்டியுள்ளது. காந்தீய வழியை நாம் காட்டி வருகின்றோம். ஆனால் பட்டினியால் வாடும் அவர்கள் மாற்றுவழியை நாடும் நிலை ஏற்பட்டால் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது.*

ஏ.எம்.டி.ராஜன், தினக்குரல் 9.8.97

* * *

*இன்று மலையக தமிழ் மக்களை எவ்வளவு தூரம் வாக்காளர் பட்டியலிருந்து நீக்க முடியுமோ அவ்வளவு அளவில் நீக்குவதற்கான மறைமுக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.*

எஸ்.சிவலிங்கம் எம்.பி, வீரகேசரி 8.8.97

* * *

*நுவரெலியாவில் கடந்த 160 வருடமாக இந்துக்கள் வாழுகின்றார்கள். ஆனால் நகர மத்தியில் ஒரு இந்து ஆலயம் அமைக்க முடியாமலிருக்கின்றது. ஒரு வழிப் பிள்ளையார் ஆலயம் கூட அமைக்க முடியவில்லை என்பதை நினைக்கும் போது வேதனையாக இருக்கின்றது.*

வி.புத்திரசிகாமணி (.மு.மா.ச), வீரகேசரிI.8.97

* * *

*இத்தகைய பாடசாலைகளை (115 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்டுள்ளது) மூடிவிட தீர்மானிக்காவிட்டாலும். சில பாடசாலைகள் பற்றி தீர்மானம் எடுக்கும் பூரண அதிகாரம் மாகாண சகல கல்விப்பணிப்பாளருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றது.*

ரிச்சர்ட் பத்திரன, கல்வி அமைச்சு., வீரகேசரி 1.8.97

* * *

*தோட்டப் பாடசாலைகளுக்கான தமிழ் மொழி மூல ஆசிரியர் தெரிவில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றவர்கள் இருக்கத்தக்கதாக, குறைந்த புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்*

அமைச்சர் ரிச்சட் பத்திரன

* * *

*'அண்மையில் தோட்டப்பகுதி பாடசாலைகளுக்கான ஆசிரியர் நியமனத்தில் 27% புள்ளிகளைப் பெற்றவர்கள் இருக்கக் கூடியதாக 25% புள்ளி பெற்றவர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது.*

ரத்நாயக்க எம்.பி., வீரகேசரி 9.8.97

* * *

*ஆசிரியர் இடமாற்றம் தொடர்பாக குறித்த விதிமுறைகள் இருக்க, பின்கதவால் குறுக்கு வழியில் செய்யப்படும் இடமாற்றங்களினால் மலையக பாடசாலைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.*

ஏ.எம்.டி.ராஜன். எம்.பி.

* * *

*மலையகத்தில் ஆசிரியர்கள் அரசியலில் ஈடுபடுவதை தடுக்க உரிய சுற்று நிருபங்கள் அடிப்படையில் கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.*

வி.புத்திரசிகாமணி, தினக்குரல் 18.08.97

# ஒரு மலையக மாணவனின் டயறி

**எஸ்.உதயசூரியன்**

### 4.08.97 - 10.8.97

விடுமுறையில் வீட்டில் இருப்பது மிக சந்தோசமாக இருந்தது. எனினும் அந்தியானதும் லாம்பு பத்த வைத்து படிக்கும்படி அம்மா கேட்பார் முத்துக்குமார் மாமாவிடமிருந்து ஞாயிற்றுக்கிழமை பேப்பர்களை வாங்கிவந்து இரவு நேரங்களில் படித்தேன். வெள்ளிக்கிழமை மிலாலு பொறுக்க நானும், சபித்குமாரும் போனோம். யாரும் மிலாலு பொறுக்கக் கூடாது என்று, காளிமுத்து கங்காணி சொன்னார். கத்தி கொண்டு வந்து கொஞ்சம் விறகுகளை 'கழிச்சிக்' கொண்டு போகிறோம் என்று கெஞ்சிக் கேட்டோம். அதெல்லாம் முடியாது. இந்த மலயிலயிருந்து ஒரு குச்சி கூட வெளிய கொண்டு போக முடியாது என்று அவர் கோபமாக சொன்னார். பெரியவர்களை எதிர்த்து பேசக்கூடாது என்று அம்மா சொன்னதால் பேசாமல் இருந்து விட்டேன். இராமையா அண்ணன் மிலாலு பொறுக்க வந்து காளிமுத்து கங்காணியோடு பெரிய சண்டை போட்டார். நீயெல்லாம் தொரைக்குப் பந்தம் பிடிக்கிறவனுங்க தானே அப்படி இப்படி என்று கோபமாக சத்தம் போட்டார். தோட்டத்துல இருக்கிற மரங்களையெல்லாம் வெட்டி சாரு கட்டயா அறுத்து, கொழும்பு, கண்டின்னு ஏத்துரானுங்க அத கேக்க ஒருத்தனுமில்ல நாங்க கொஞ்சம் வெறகு கழிச்சிக்கிட்டுப் போகிறது குத்தம். என்னாங்கடா ஓங்க ஞாயம் என்று அவர் கேட்டது எனக்கும் சரியாகத்தான் பட்டது.

றோட்டில் கிடந்த ஐந்து காய்ந்த முருங்கை கம்புகளை மட்டும் எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்து விட்டோம். கவ்வாத்து மலயில் நடந்த விடயங்களை அம்மாவிடம் சொன்னேன். தேயில மரத்துக்கு உரம் தேவைங்கிறனால அத பொறுக்க வேணாமுனு தொர சொன்னாராம் என்று அம்மா கூறினார். இது விசயமாக பல கேள்விகள் தோன்றினாலும் பேசாமலிருந்து விட்டேன்.

### 11.08.97 - 17.8.97

கவ்வாத்து மலயில மிலாலு பொறுக்குவது பற்றிய பிரச்சனை பற்றி பன்னீர் மாமாவிடம் கேட்டேன். முந்தியெல்லாம் கவ்வாத்து காட்டுலயிருந்து மிலாலு பொறுக்குவோம் தானே இப்பமட்டும் இவனுவங்களுக்கு என்னா வந்திரிச்சி என்று கேட்டேன். முந்தி மாதிரி இப்ப தேயிலைக்கு ஒழுங்க உரம் போடுறதில்ல ஒழுங்கா புல்லு வெட்டுறது இல்ல,. மருந்தடிக்கிறது இல்ல. இதுனால தான் ஏழாம் நம்பர் மல காடாகி போயி கெடக்கு, இருக்கிற மரத்துக்கு கவ்வாத்து வெட்டுன மிலாலு இலைகளைப் போட்டாவது லாபம் பெற பாக்குறாங்கன்னு அவர் விளக்கமாக பதில் சொன்னார். கம்பெனிகாரனுங்களுக்கு லாபந்தான் தேவ, குத்தக முடிந்த பிறகு தோட்டக்காடு எப்படி போனாத்தான் என்ன அதுபத்தி அவனுங்களுக்கு கவலயில்ல என்று அவர் கூறியபோது எனக்கு கம்பனிகாரனுங்க மேல சரியான கோபம் வந்தது.

செவ்வாயிலிருந்து சனிக்கிழமை வரை எங்கும் போகவில்லை. ஞாயிறு புல்லுமலயில் குத்து கட்டை வெட்டப் போனோம். அங்கு ஒரு மரம் கூட இருக்கவில்லை முந்தி இங்கு நிறைய கருப்பந்தேயிலை மரங்களும், சவுக்கும் இருந்தது, எனக்குத் தெரியும். இந்த மரங்கள் பத்துப் பிரிவாக பிரிக்கப்பட்டு, ஒரு பிரிவுக்கு 500 மரங்கள் இருந்தன. அதன்படி புல்லுமல பள்ளத்தில் 5000 மரங்கள் இருந்தன. தோட்டக் கம்பெனி எடுத்தப்பிறகுதான் இந்த மரங்கள் அனைத்தும் வெட்டப்பட்டன. நம்மா தோட்டத்து ஆளுக ஒரு மரக்கம்ப வெட்டிப்புட்டா வேல நிப்பாட்டிடுவாங்க வழக்கு, வம்புன்னு பெரிய பிரச்சினையே நடந்து முடிஞ்சிடும். ஆனால், இந்த ஐயாயிரம் மரத்தயும், ஒரே மாசத்துல வெட்டி கொண்டு போயிட்டானுங்க, வழக்காவது வம்பாவது. முடிஞ்ச மண்ணக்கூட வெட்டி வப்பானுங்க யாரு கேப்பா. தோட்டங்கள அத்த கெரயத்துக்கு வித்த மாதிரிதானே.

### 18.08.97 - 24.8.97

திங்கள் போயா. ஹைபோரஸ்டிலிருந்து மாமா வந்தார். அங்குள்ள காட்டில் விறகு பொறுக்கப் போன இரண்டு குமரி புள்ளங்கள் காட்டுக்குள்ளே வச்சி வெட்டி கொன்னு போட்டதாக அவர் கூறினார். நம்ம வெறகு வெட்டப்போனா காட்டுக்காவகாரன் வருவான் வழக்கு போடுவான் முடிஞ்சா வெட்டி கொல்லுவான். ஆனால் ஒவ்வொரு எலக்சன் முடிஞ்சதும், வெத்துன கட்சிக்காரனு சொல்லி எங்கெங்க உள்ளவன் எல்லாமே வந்து, அழிச்சி இடம் புடிக்கிறான். அது எல்லாம் பிரச்சினை இல்ல. குத்தமும் இல்ல. நானு ஓயாவில இருந்து நுவரெலியா போறமட்டும் உள்ள இடங்கள போயி பாக்கணும். நுவரெலியாவுல இருந்து வெலிமட போறமட்டும், ஐபோரஸ்ட், உடபுசல்ல, பகுதியில எல்லாம் இதுதானே நடக்குது என்று அவர் சொன்னார். தொழிலாளிங்க மரம் நடனும் ஆனால் மரம் வெட்டக் கூடாது. முதலாளிங்க அரசியல் வாதிங்க மரம் வெட்டனும் ஆனால் மரம் நடக்கூடாது அப் புடிங்கிற ஞாயம் தான் தோட்டப் பகுதியில நடக்குதுங்கிறது எனக்கு நன்றாகவே புரிந்தது.

இந்தவாரம் எங்கும் போகவில்லை. வீட்டிலிருந்து அட்டலை துப்பரவாக்கினேன்.

### 25.08.97 - 31.8.97

திங்கள் அம்மாவுக்கு மருந்து வாங்க தோட்டத்து ஆசுப்பத்திரிக்குப் போனேன். வில்லை மட்டும் 6 கொடுத்தார்கள். அம்மாவுக்கு கொடுத்தேன். சித்திலேப்ப பூசி விட்டேன். புதன் பாடசாலைக்குப் போனேன். எல்லா இடமும் கூட்டித் துப்புறவாக்கினோம். வியாழன் சாயி பூஜை நடைபெற்றது. வெள்ளி நேரத்தோடு பாடசாலை விடப்பட்டது.

நன்றி - நூலகத்திட்டம்



# தொண்டமானுக்கு ஒரு ஆலோசனை :

# 'பிச்சை' நிபந்தனைகள் வேண்டாம்

'அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுப்பொதி மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளையும் தீர்ப்பதாக இல்லை. அரசாங்கம் முன்வைக்கும் எந்தவொரு தீர்வுத்திட்டமும் மலையக மக்களின் அடிப்படை உரிமைகளை உத்தரவாதப்படுத்துவதாக இருந்தால் மாத்திரமே அதற்காக மக்கள் மத்தியில் பிரசாரம் செய்து ஆதரவு திரட்ட இலங்கை தொழிலாளர் காங்கிரஸால் முடியும்'


இவ்வாறு தொண்டமான் சொன்னது மிகவும் சரியானதே.

இப்படி சொல்லிவிட்டு தீர்வுப் பொதியில் மலையக மக்களின் உரிமைகளை உறுதிசெய்வதற்கான யோசனைகள் எதனையும் முன்வைக்கவில்லை. பதிலாக அரசாங்கத்தின் தீர்வுப்பொதியை ஆதரிக்க வேண்டுமானால் பின்வரும் மூன்று நிப்ந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கூறியுள்ளவர்.

1. ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒவ்வொரு கிலோ கிராம் தேயிலை மீதும் 50 சதம் வரி விதித்து அப்பணத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களின் உள்ளகக் கட்டமைப்புகளை பொதுவசதிகளை ஏற்படுத்துவதற்கான நிதியத்தை ஏற்படுத்த வேண்டும்.
2. தோட்டப்புறக் காரணிகளை பிரதானமாக அரசியல் லாபத்துக்காக பகிர்ந்தளிப்பது நிறுத்தப்பட வேண்டும்.
3. இன்னமும் அரசாங்கத்திவ் கீழ் இயங்கும் தோட்டங்களுக்கு திறைசேரி மானியங்கள் தொடர்ந்தும் வழங்கப்பட வேண்டும்.

மேற்கூறப்பட்ட மூன்று நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட்டால் அரசியல் தீர்வுப் பொதியில் மலையக மக்களுக்கு எவ்வித பாதுகாப்புகளும் தேவை இல்லை என்று தொண்டமான் கருதுவதாக தெரிகிறது.

மலையக மக்கள் ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் அவர்களின் இனஉரிமைகள் எவ்வாறு பாதுகாக்கப்பட வேண்டும் என்பது பற்றி எவ்வித கவனமும் செலுத்தாமல் 'பிச்சை' கேட்பது போன்று மேற்கண்ட நிபந்தனைகளை முன்



வைப்பதால் மலையக மக்களுக்கு எவ்வித நன்மையும் ஏற்படப் போவதில்லை.

தீர்வுப் பொதியை ஆதரிக்க வேண்டும் என்று அமைச்சர் ஜி. எல்.பீரிஸ் தொண்டமானை கேட்டுள்ளார். மலையக மக்களுக்கு நன்மைக் கிடைக்கும் வகையில் எவ்வாறு தீர்வுப் பொதியை நடைமுறைப்படுத்த முடியும் என்பது பற்றிய ஆலோசனைகளையும் கேட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மலையக மக்களை இனரீதியாக அடக்கிவரும் அம்சங்களை நீக்கி, அவர்கள் இனரீதியாக பாதிக்கப்படாதவாறு பாதுகாக்கும் யோசனைகளை தீர்வுப்பொதியில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றே தொண்டமான் கேட்டிருக்க வேண்டும்.

அதைவிட்டு விட்டு தீர்வுப் பொதியில் - அதிகாரப் பங்கீட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய சில்லறை விடயங்களை முக்கிய நிபந்தனைகளாக முன்வைத்திருப்பது அரசியல் முதிர்ச்சியற்றதன்மையையே வெளிப்படுத்துகிறது.

மலையக மக்கள் தங்களை தாங்களே நிர்வகித்துக் கொள்ளும் அளவிற்கு அவர்களுக்கு அதிகாரங்கள் பங்கீடு செய்யப்பட்டால் பொதுவசதிகளுக்கு உள்ளக் கூட்டமைப்புகளுக்கு '50 சதம்' கேட்க வேண்டிவராது.


காணிப்பங்கீட்டிலும் மலையக மக்களுக்கான உரிமை உறுதி செய்யப்படாவிட்டால் 'தோட்டக் காணிகளை அரசியல் காரணங்களுக்காக பகிர்ந்தளிக்கப்படமாட்டாது' என்று வெறும் வாக்குறுதியை மட்டும் பெற்றால் போதாது. அரசதோட்டங்களுக்கு தொடர்ந்து மானியங்கள் வழங்கப்படும் என்றும் ஒரு வாக்குறுதியை அரசாங்கம் கொடுத்தால் மட்டும் போதாது.

தொண்டமானால் முன்வைக்கப்பட்ட மூன்று நிபந்தனைகளை ஏற்பதாக அரசாங்கம் வாக்குறுதி அளிக்கலாம். அவ்வாறான வாக்குறுதிகள் அதிகாரப் பங்கீட்டு தீர்வுத்திட்ட யோசனைகளால் மீறப்படலாம். மேலும் தொண்டமானுக்கும், மலையக மக்களுக்கும் இந்நாட்டை ஆண்ட அரசாங்கங்கள் கொடுத்த வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இந்த அனுபவத்தை கொண்ட தொண்டமான் மேலும், மேலும் வெறும் வாக்குறுதிகளையே அரசாங்களிடம் எதிர்பார்க்கிறார்? 'பிச்சை' நிபந்தனைகளை ஏற்பதாக வெறும் வாக்குறுதிகளையே அரசாங்கங்கள் கொடுப்பதால் அவை நிறைவேற்றப்படப் போவதில்லை.

அதனை நேர்மையாக விளங்கிக் கொண்டு, தீர்வுப்பொதியின் நோக்கம் சிறுபான்மையினரின் உரிமைகளை உறுதி செய்வதாகும் என்பதையும் விளங்கிக் கொண்டு 'பிச்சை நிபந்தனைகளை முன்வைக்கலாம்' மலையக மக்களின் இன உரிமைகளை உறுதி செய்யும் ஆகக்குறைந்த ஏற்பாடுகளையாவது முன்வைக்க வேண்டும்.

அந்த ஆகக்குறைந்த ஏற்பாடுகள் எவை என்பதை எல்லா மலையக அமைப்புகளுடனும் கலந்துரையாடி முன்வைக்க வேண்டும்.



1. மலையக மக்கள் தமிழ்மொழியிலேயே எல்லா அரசாங்க, நீதிமன்ற, அலுவலக நடவடிக்கைகளையும் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.
2. மலையக மக்களுக்கான முன்வைக்கப்பட வேண்டிய சுயாட்சி அல்லது நிர்வாக அலகுகள் எவை என தெளிவாக முன்வைக்க வேண்டும்.
3. மலையக மக்களுக்கு தேவையான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்யும் தேர்தல் முறையை முன்வைக்க வேண்டும்/ மேற்படி அடிப்படையில் ஆகக்குறைந்த யோசனைகளையாவது முன்வைக்க வேண்டும்.

அவற்றை தீர்வுத்திட்டத்தில் சேர்த்தால்தான் மலையக மக்களின் ஆதரவை பெற்றுத்தர முடியும் என்று துணிவாகவும், நேர்மையாகவும் தெரிவிக்க வேண்டும்.

# வவுனியாவில் அப்புறப்படுத்தும் திட்டம்

வடக்கு நோக்கிய பாதையில் வடமாகாணத்தை தமிழர் பிரதேசத்தை தொட்டுத் தொடக்கி வைப்பது வவுனியா என்பது எல்லோரும் அறிந்ததே. அந்த வவுனியா மாவட்டம் தனித் தமிழர் பிரதேசமாகவும் காடுகள்ர்கவும் இருந்து வந்தது. ஆனால் காலப் போக்கில் உள்ளார்ந்த திட்டத்துடன் வலுக்கட்டாயக் குடியேற்றங்கள் மூலம் சிங்களக் கிராமங்கள் தோன்றி ஒரு பகுதி சிங்களப் பிரதேசமாகியது. இன்று வவுனியா வடக்கு, தெற்காகி நிற்பது தமிழர் சிங்கள இன அடிப்படையில்தான்.

இத்தகைய வவுனியா பிரதேசம் அண்மைக்கால யுத்த நெருக்கடிகளால் பல்வேறு முக்கியத்துவத்தை பெற்றுக் கொண்டது. ராணுவக் கேந்திர நிலையங்கள் தோன்றின. வடக்கு தெற்கின் இணைப்பு மையமாகியது. வியாபார மத்திய ஸ்தலமாகியது. பல்லாயிரக்கணக்கான அகதிகளின் தரிப்பிடமாகியது. கல்வி நிர்வாக நிலையங்கள் விரிவுபட்டன. இவை அனைத்தாலும் மக்கள் சனத்தொகை வவுனியாவில் அதிகரித்தது. தற்காலிகக் குடியிருப்பாளர்களும் நிரந்தரக் குடியிருப்பாளர்களும் வவுனியாவை ஒரு பாதுகாப்புப் பிரதேசமாகக் கணித்து வரவை அதிகரித்தனர்.

தமிழர்களின் இத்தகைய அதிகரிப்பு வவுனியா மீது ஆழக் கண் பதித்து நிற்கும் பேரினவாதிகளுக்கு ஒரு வளர்ந்து வரும் இடைஞ்சலாகத் தென்படுகிறது. விரைவில் தமிழர்களது எண்ணிக்கை அதிகரித்து விடுமோ என அவர்களால் அஞ்சப்படுகிறது. அதன் காரணமாக வவுனியா நகரத்திலும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் தமிழர்கள் நிரந்தரமாகவும் தற்காலிகம்ாகவும் குடியமர்வதை வெவ்வேறு வழிகளில் கட்டுப்படுத்தும் எத்தனிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு ஒரு கவசமாகவே ''பாஸ்'' முறை பயன்படுகிறது. அதனையும் விடப் பாதுகாப்பு விதிமுறைகள் கட்டுப்பாடுகள், நிவாரணம் வழங்குவதில் தாமதங்கள் அகதி முகாம்களின் தேவைகளை சீராகச் செய்யாது விடுதல் போன்றவற்றின் மூலமாக தமிழர்களை அப்புறப்படுத்த முயற்சிக்கப்படுகிறது. வெளிப்படையாகக் காட்டாத உள்ளார்ந்த செயற்பாடுகளால் இவ்வப்புறப்படுத்தும் நடவடிக்கைகள் பல்வேறு மட்டங்களிலும் இடம்பெறுகிறதா என்ற சந்தேகம் அண்மைக் காலங்களில் எழவே செய்கிறது. இதையிட்டு சம்பந்தப்பட்ட சகலரும் விழிப்பாயிருப்பது நல்லது.

# பெருந்தோட்ட வேலை நிறுத்தங்கள்

பெருந்தோட்டங்கள் 222 தனியார் கம்பெனி முதலைகளிடம் தாரைவார்த்துக் கொடுக்கப்பட்டதன் பின்பு, தொழிலாளர்கள் பல்வேறு புதிய பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏற்கனவே போராடி வெல்லப்பட்ட பல கோரிக்கைகளுக்கு மீண்டும் போராட வேண்டிய, நிலைமைக்கு ஆளாகியுள்ளனர்.

1.வேலை நாட்களின் எண்ணிக்கை

2. வயது வந்த பிள்ளைகளை பெயர்பதிதல்

3. ஆதாய போனஸ்

4. 10% இலாப பண்ம் பெறுதல்

5. சேமலாப நிதியைப் பெறுதல்

6 தொழிலாளர் நிருவாகிகளால் தாக்கப்பட்டமை.

7. சுகாதார சேமநலன்.

8. பாடசாலைக்குத் தேவையான நிலம் பெறுதல்

9. தோட்டங்கள் மூடப்படுவதை எதிர்த்தல்

10. தேயிலையை அழித்தல்

போன்ற கோரிக்கைகள் தொடர்பாக மாதக்கணக்கில் தொடரும். வேலைநிறுத்தங்களும் இடம் பெற்றுள்ளன. இக்கோரிக்கைகள் பெரும்பாலும் எல்லா தோட்டங்களுக்குமே பொருந்துவதாக அமைந்தாலும், அதற்காக போராட்டங்கள் தனித்தனியான தோட்டங்களில் அல்லது ஒரு டிவிசனில் மட்டுமே. இடம் பெறக்கூடிய ஒரு சூழலே தென்படுகின்றது.

பெருந்தோட்டப்பகுதியில் இடம் பெறும் வேலை நிறுத்தங்கள், குறித்த கம்பெனிக்கெதிராகக் கம்பெனி அல்லது நிருவாகத்துக்கெதிராகவே அமைகின்றது. குறித்த கம்பெனியின் கீழ் வரும் தோட்டங்கள் அனைத்தையும் இணைத்து, பொதுக்கோரிக்கைகளின் அடிப்படையில் வேலை நிறுத்தம் அல்லது வேறு வகை போராட்டங்களில் ஈடுபடக்கூடியளவிற்கு தொழிலாளர்கள் தயார் செய்யக்கூடிய நிலைக்கு தொழிற் சங்கங்களும் தயாராக இல்லை.

தொழிற்சங்க வேறுபாடுகளை மறந்து பொதுக்கோரிக்கைகளுக்காக ஒன்றுபடும் நிலைக்கு தொழிலாளர்கள் முன்னேறியுள்ளனர். சில போராட்டங்களுக்கு வேறு தோட்டத் தொழிலாளர்கள் ஆதரவளித்துள்ளனர். அரசு சார்பற்ற நிறுவனங்கள் உணவு போன்றவற்றை வழங்கி உற்சாகப்படுத்தியுள்ளனர். மனித நேயமிக்க, முற்போக்குத்தாபனங்கள் இப்போராட்டங்களை வரவேற்று ஆதரித்துள்ளனர்.

தனியார் மயப்படுத்தப்பட்ட தோட்டங்களில் தொழிலாளர்களால் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகளை சரியாக அடையாளங் கண்டு, அவற்றை பொதுக் கோரிக்கையாக மாற்றி, முழு மலையகம் தழுவிய போராட்டங்களை முன்னெடுப்பதன் மூலமே, தொழிலாளர்கள் தமது பலத்தினை உறுதி செய்து கொள்ள முடியும். தொழிலாளர்களை அடக்குவதிலும், அவர்களை நசுக்கிப் பிழிவதிலும் 22 கம்பெனிகளும் ஒற்றுமையாக நிற்கின்ற சூழலில் தொழிலாளர்கள், அதற்கெதிராக அரசியலடிப்படையில் ஒன்றுபட வேண்டியதும் மலையக அரசியல் தாபனங்கள் அதனை சரியாக வழிநடத்தி, தலைமை கொடுப்பதும் இன்றைய சூழலில் தவிர்க்க முடியாத தேவைகளாக முன்னெழுந்துள்ளன.

இத்தகைய ஐக்கியப்பட்ட போராட்டங்களின் மூலமே தொழிலாளர்கள் தமது கோரிக்கைகளை பூரணமாக வென்றெடுக்க முடியும் என்பதோடு, சுயநலமிக்க, காட்டிக் கொடுக்கும், பிரித்தாளும் சூழ்ச்சி, போன்ற கீழ்த்தரமான தலைமைகளை மக்கள் முன் அம்பலப்படுத்த முடியும் என்பதுவும் இங்கு நோக்கப்பட வேண்டும்.

நன்றி - நூலகத்திட்டம்



# தென்னகமும் பெண்ணியமும்



**18வது** 'காலச் சுவடு' காலாண்டுச் சஞ்சிகையில் ஓவியா என்று பெண்ணுரிமை வாதியின் செவ்வியைக் கண்டேன். தமிழ் நாட்டில் 'பகுத்தறிவு இயக்கம்' பெண்ணுரிமை பற்றிய விழிப்புணர்வுக்கு ஒரு பெரிய பங்கை அளித்துள்ளது என்பது அதிலே தெளிவாகிறது. அதே வேளை, அந்த இயக்கத்தினுள்ளே ஆணாதிக்கச் சிந்தனையும் தன் வேர்களை ஓடவிட்டுள்ளது என்பதும் தெளிவாகிறது. பகுத்தறிவு இயக்கம் பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் என்றே விஷயங்களை ஆராய்ந்து பழக்கப்பட்டதன் விளைவு அதன் தொடர்ச்சியாக வந்த பெண்ணுரிமை இயக்கத்திலும் எதிரொலிக்கிறதையும் நான் காண முடிந்தது. ஆயினும், ஓவியா சமூக சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு பெண்ணுரிமைவாதி என்பது பற்றி ஐயமில்லை.

அண்மைக்காலத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரை பெண்ணுரிமைக்கான முதலாவது காத்திரமான குரல் சுப்பிரமணிய பாரதியுடையது என்று தயங்காமற் கூறலாம். தேசிய விடுதலை, பெண்விடுதலை, சாதி வேறுபாடின்மை, மனித சமத்துவம் ஆகியவற்றை ஒருங்கிணைத்த பெருமை அவரது கவிதைக்கு உண்டு. இதன் விளைவாகத் தமிழகத்து முற்போக்குச் சிந்தனையார்கள் பெருவாரியானவர்கட்கு அவர் ஒரு முன்னுதாரணமான கவிஞராகவும் போராளியாகவும் இன்னமும் தெரிகிறார்.

தமிழகத்தில் பெண்ணுரிமை தொடர்பாகக் குரல் கொடுத்தவர்களில் இடதுசாரிக் கட்சிகட்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. இந்த மரபின் தொடர்ச்சியை நாம் இன்னமும் தமிழகக் கம்யூனிஸ்ட் கட்சிகள் தொடர்பான பெண்கள் அமைப்புகளிற் காணலாம். ஆயினும், தமிழகத்தின் சாதிய, ஆணாதிக்கச் சமூகச் சூழலில் பெண்ணுரிமை தொடர்பாகச் செய்ய வேண்டியது அதிகம். தமிழகத்து இடதுசாரிகள் இதுபற்றி நடைமுறையில் செய்ய வேண்டியது குறிப்பாக முக்கியமானது.

தமிழ்ப் பண்பாடும் பாரம்பரியமும் பற்றிப் பேசுகிற திராவிட இயக்கங்களும் பாரதப் பெண்ணின் பெருமை பேசுகிற காங்கிரசும் அரசியல் அதிகாரத்தைப் பங்கு போடும் சூழலில், ஆண்-பெண் சமத்துவம் அவர்களுடைய அதிகார பேரங்களில் ஒரு முக்கியமான அம்சமல்ல. (ஒரு பெண் முதலமைச்சராக வருவது ஆணாதிக்கத்தின் தகர்வின் அடையாளமல்ல என்பதை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.)

பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்துப் போராடக் கூடிய முற்போக்கு அரசியல் சக்திகள் வலுவிழந்து காணப்படும் போது, பெண்களுக்காகப் போராடும் பாவனையுடன் வசதிபடைத்த, நடுத்தர வகுப்புப் பெண்களின் பெண்ணுரிமை இயக்கங்கள் தலை தூக்குவது இலகுவானது. மக்கள் மத்தியிலான முரண்பாடுகளைப் பகை முரண்பாடுகளாகக் காட்டி ஏகாதிபத்தியவாதிகளுக்கும் எசமான வர்க்கத்தினருக்கும் எதிரான போராட்டங்களைப் பிளவுபடுத்திப் பலவீனப்படுத்தும் முனைப்புடன் செயற்படும் தன்னார்வ நிறுவனங்கள் பணபலத்துடன் இவ்வாறான அமைப்புக்களை ஊடுருவுகின்றன, பிரசுர வசதிகள், ஆராய்வுக்கான நிதி உதவி, அயல்நாட்டுப் பயணம் போன்றன மூலம் ஆசை காட்டப்படுகிறது. யார் குத்தியும் அரிசியானால் சரி என்று தொடங்கிக் குத்துகிறவர்களிடமே அரிசியைக் கொடுத்து உமியை அள்ளுகிற நிலைக்குப் பல அமைப்புக்கள் பலியாகியுள்ளன. இதற்குச் சில தலித்திய, பெண்ணிய அமைப்புக்களை உதாரணம் கூறலாம்.

பெண்ணுரிமையைச் சமுதாயத்தின் பிற ஏற்றத்தாழ்வுகளின் நீக்கத்துடன் இணைத்து நோக்க மறுக்கும் ஒரு வகையான பெண்ணியம், கடந்த இருபது முப்பது வருட கால இடைவெளிக்குள் தலை தூக்கி இருக்கிறது. இது பல வேறு போர்வைகளின் கீழே வந்துள்ளது. ஆயினும், இதன் முக்கியமான போக்கு, சமுதாய மேலடுக்கில் உள்ள சில பெண்கள் அரசு மற்றும் உத்தியோகத் துறைகளில் தங்கள் அதிகாரத்தைப் பெற்றுப் பேணுவதற்கான தேவை சார்ந்தது. எனவே பெண்களுடைய பிரச்சனைகளாக இவர்களால் முதன்மைப்படுத்தப்படும் பிரச்சனைகள் தமிழகத்திலோ இந்தியாவின் பிறமாநிலங்களிலோ உள்ள ஏகப்பெரும்பான்மையான உழைக்கும் வர்க்கங்களைச் சார்ந்த பெண்களது பிரச்சினைகள் அல்ல.

சிலசமயம், இந்தப் பெண்ணியவாதிகளுடைய முக்கியமான அக்கறைகள் லெஸ்பியனியம் எனப்படும் (பெண்களின்) சமபாற்காமமும் இடதுசாரிகள் மீது வசைமாரி பொழிவதும் என்றே தான் தோன்றுகிறது. குடும்பம் என்கிற ஆணாதிக்க சமூக அலகைக் கடுமையாக விமர்சித்துக் கொண்டே நிலமான்ய சமூகக் குடும்ப உறவுகள், தொடர்புகள் போன்றவற்றையும் சாதிய மேம்பாட்டையும் தங்களது தனிப்பட்ட உயர்ச்சிக்காகப் பயன்படுத்துவதை நாம் காணலாம். இவர்கள் வேண்டுகிற ஆண்-பெண் சமத்துவம் தங்களது சாதி, வர்க்கம் ஆகியவற்றில் ஆணுக்கு நிகராகப் பெண் இருப்பதோடு நிறைவு கொள்ளுகிறது. தங்களுக்குக் கீழான சமூக அடுக்கில் உள்ளவர்களை ஆண்-பெண் வேறுபாடு இல்லாமல் சுரண்டுவதும் அடக்கி வைப்பதும் இவர்களில் பெரும்பாலானவர்கட்குப் பூரண ஏற்புடையது. இப்படிப்பட்ட பெண்ணியம், மேலை நாடுகளில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ள ஒரு பெண்ணியப் போக்குடன் தன்னை நெருக்கமாக இனங்காணுகிறதில் அதிசயமில்லை. ஏனெனில், அவர்களுக்கு நிறவெறி, நவகொலனித்துவம் போன்றவை பற்றி அக்கறை இல்லாதது போல இவர்களுக்கு உள்ளூர் சமூக அடக்குமுறை பற்றிய அக்கறை ஏதும் இல்லை. இவர்களது குரல் இவர்களது உண்மையான சமூகப் பெறுமதிக்கும் அதிகமாக ஓங்கி ஒலிப்பது பெண்ணுரிமைக்கு எதிரான போக்குகளையே வலிமைப் படுத்துகிறது. ஏனெனில், பெண்ணியம் என்பது மேலைநாட்டு ஏகாதிபத்திய இறக்குமதி, நமது நாட்டுக்குப் பொருந்தி வராது என்னும் விதமான பழமைவாத வாதங்களுக்கு வசதியான ஆதாரங்கள் இவர்களது நடைமுறையில் நிறையவே உள்ளன.

பெண்ணுரிமைக்காகக் குரல் கொடுத்துப் போராடக் கூடிய முற்போக்கு அரசியல் சக்திகள் வலுவிழந்து காணப்படும் போது, பெண்களுக்காகப் போராடும் பாவனையுடன் வசதிபடைத்த, நடுத்தர வகுப்புப் பெண்களின் பெண்ணுரிமை இயக்கங்கள் தலை தூக்குவது இலகுவானது.

மேற்கூறிய பெண்ணுரிமைவாதிகளை விட வித்தியாசமான பெண்ணுரிமை வாதிகள் தமிழகத்தில் இல்லாமலில்லை. அவர்கள் மற்றச் சமூகப் பிரச்சனைகளுடன் தங்களை நெருக்கமாக இணைத்து மற்றச் சமூக நியாயங்களுடன் பெண்ணுரிமையையும் வலியுறுத்திச் செயற்படுகிறார்கள். இவர்களுக்கு முன்னோடிகளாக இந்தியாவின் பிற மாநிலங்களில் ஆதிவாசிகளது நில உரிமையை வலியுறுத்திப் போராடுகிற மேதா பட்கர் போன்ற பெண்ணுரிமைப் போராளிகளையும் ஏகாதிபத்திய வாதிகள் இந்தி விவசாயத்திற்குச் செய்யும் கேடுகள் பற்றி விளக்கி வரும் வந்தனா சிவா போன்றோரையும் காட்டலாம்.

இத்தகைய போக்குகள் கூட, சமூக நீதிக்கான மற்றைய சக்திகளுடன் நெருக்கமான இசைவு காணத் தவறும் பட்சத்தில், பலவீனப்பட்டுப் போக இடமுண்டு. மறுபுறம், தமிழகத்தின் இடதுசாரிகள் மத்தியில் பெண்ணுரிமை பற்றிய அசமந்தமான போக்குகள் இருப்பது இடதுசாரிகளது வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

மாக்ஸியத் தலைவர்கள் பெண்களின் சமதுவத்துக்காகக் குரல் கொடுத்தவர்களுள் காலத்திலும் காத்திரத்திலும் முன்வரிசையில் நின்றவர்கள். சனத்தின் விடுதலைக்கு வழிசாட்டிய கம்யூனிஸ்ட் கட்சி பெண்ணுரிமை பற்றிய உறுதியான நிலைப்பாட்டை விடுதலைக்குப் பின்பான தனது நடவடிக்கைகள் மூலம் தெளிவு படுத்தியது பற்றி அண்டையில் உள்ள இந்தியாவின் கம்யூனிஸ்டுகள் மிகுந்த கவனம் காட்ட வேண்டும்.

சினிமா, டிவி (தொலைக்காட்சி) சஞ்சிகைகள் போன்றன ஊக்குவிக்கும் கலாசார சீரழிவு பெண்களைப் பல விதங்களிலும் இழிவு செய்வதாகும். பெண் சிசுக் கொலை, பெண்களுக்கு எதிரான சமூக வன்முறையும் குடும்ப வன்முறையும் சீதன முறையும் கல்வி உரிமை மறுப்பும் ஒவ்வொரு முற்போக்குவாதியும் தீவிரமாக எதிர்த்துப் போராட வேண்டியவை. இவற்றை நடைமுறைப் படுத்த வேண்டிய பெண்கள் அமைப்புகளைக் கட்சி அரசியல் இயக்க நலன்கட்கும் அப்பாலான அக்கறையுடன் கட்டியெழுப்புவதற்கு முற்போக்குச் சக்திகள் கூடிய கவனம் காட்டுவதன் மூலமே சமூக நீதிக்கான தமது போராட்டத்தை வலுப்படுத்த முடியும்.

5ம் பக்கத் தொடர்ச்சி

## போடைஸ் தோட்டத்தில் ..

ஒத்துழைப்பையும் வழங்கவில்லை என்பது தொழிலாளர்களின் குற்றச்சாட்டாக இருந்தது.

இந்த வேலை நிறுத்தத்தின் பாதிப்பு மற்றைய தோட்டங்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் தமிழ் பத்திரிகைகள் இது போன்ற விடயங்களை இருட்டடிப்பு செய்வது கவலைக்குரிய காரணமாகும்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தின் முடிவு 100% வெற்றியாக இல்லாவிட்டாலும் இன்னும் இரண்டு மாதங்களுக்கு பின் பதியப்பட்ட அனைத்து பிள்ளைகளுக்கும் வேலைதருவதாக கம்பனியும் தொழிற்சங்கமும் ஒப்பந்தம் செய்து கொண்டதை அடுத்து அனைத்து தொழிலாளர்களும் வேலைக்கு சென்றனர். இந்த தொழிற்சங்கங்களும் நிர்வாகத்துடன் பின் கதவு ஒப்பந்தங்கள் செய்யாமல் தொழிலாளர்களின் உரிமைகளை பெற்றுக் கொடுத்தார்களானால் வேலை நிறுத்தம் அர்த்தமானதாக அமையும்.

தொழிலாளர்களை நேர்முகம் கண்டு தொகுத்தவர்
கிங்ஸ்லி கோமஸ்.

8ம் பக்கத் தொடர்ச்சி

## அரை நூற்றாண்டு ....

குறுகிய கால நலன்கட்காக நாட்டின் பொருளாதாரத்தையும் மக்களின் நீண்ட கால நலன்களையும் பலியிட ஆயத்தமாக நிற்கின்றனர்.

இந்தியாவின் சமுதாய ஒடுக்குமுறையின் முக்கியமான கூறுகளாக உள்ள சாதியம், ஆணாதிக்கம், குறுகிய இனவாதம், மதவெறி போன்றவை புதிய அதிகார வர்க்கத்தின் வருகையால் மேலும் சுக்கலாகி உள்ளன. இந்தியாவின் ஒடுக்கப்பட்ட மக்கள் தமது பொது எதிரியான ஏகாதிபத்தியத்துக்கும் அதன் உள்ளூர் எடுபிடிகளான பெரு முதலாளிகட்கும் தரகு முதலாளித்துவக்கும் நிலமான்ய சமுதாயத்தின் எச்சங்களின் காவளர்களான சாதி வெறியர்களுக்கும் நிலப்பிரபுக்களுக்கும் எதிராகப் போராட முடியாத விதமாக மக்களைப் பிளவு படுத்தும் முயற்சிகள், அயல் ஊடுருவலால் பல வேறு வகைகளிலும் ஊக்குவிக்கப்படுத்தப்படுகின்றன.

இந்தியாவின் ஐக்கியம் மூன்றாம் உலகின் மக்களுக்கு நல்லது. எனவே அது பேணப்படுவது நல்லது. அதைப் பேணுவதாயின் பல்வேறு ஆதிக்க அடுக்குகளையும் சுரண்டல் அமைப்புக்களையும் கொண்ட ஒரு அரசமைப்பால் முடியாது. தேசிய இனங்களும் சிறுபான்மை இனப்பிரபுகளிலும் சமமான அடிப்படையில் இணையும் ஒரு அரசமைப்பும் சாதி மத அடிப்படையிலான ஏற்றத்தாழ்வும் பாகுபாடுமற்ற ஒரு சமுதாய முறையில் ஆணும் பெண்ணும் சரிநிகர் சமானமாக வாழும் ஒரு இந்தியாவால் மட்டுமே அது இயலும்.

இன்று வரை இந்தியாவில் மக்கள் தமது உரிமைகட்காகப் போராடி நிலவுடமை ஆதிக்கம், சாதியம், ஆணாதிக்கம், மதவெறி, மொழிவெறி போன்றவற்றுக்கு எதிராக பல வெற்றிகளைப் பெற்றுள்ளனர். தொழிலாளர்களது உரிமைகள் பல வெல்லப்பட்டுள்ளன. இவை போதா. அது மட்டுமன்றி இவ் வெற்றிகள் மேலும் முன்னெடுக்கப்படாது போனால், அதிகாரவர்க்கம் தன்னைப் படிப்படியாக மேலும் நிலைநிறுத்துவதைத் தடுக்க முடியாது.

சமுதாயம் என்றுமே ஸ்தம்பித நிலையில் இருப்பதில்லை. கீழைக்காற்று ஓங்கி வீசாது போனால், மேலைக்காற்று ஓங்கி வீசுவதற்கே இடமுண்டு. முற்போக்குச் சக்திகள் சமுதாயப் புரட்சியை முன்னெடுத்துச் செல்லத் தவறினால், பிற்போக்குச் சக்திகள் வரலாற்றைப் பின்னோக்கித் தள்ள முயல்வது தவிர்க்க இயலாதது.

இந்த ஐம்பது ஆண்டுகளில் உலகம் மிகவும் மாறி விட்டது. மனித இனம் பெற்ற வெற்றிகள் அதிகம். ஆயினும் தோல்விகளும் ஏற்பட்டுள்ளன. இவை தற்காலிகமானவை. இவற்றின் முன் துவண்டு போகிறவர்கள் மாக்ஸிய லெனினிஸ வாதிகளாக இருக்க முடியாது. ஏனெனில் இந்தியாவின் வர்க்க சமுதாயத்தின் சிக்கலான வரலாற்று முரண்பாடுகளினூடு பரந்துபட்ட மக்களின் நலன் சார்ந்த ஓர் இழையை இனம் கண்டு அதை வலிமைப்படுத்தி இந்திய மண்ணை மாற்றும் மகத்தான பணி அவர்களுடையது.

இன்றைய இந்தியா வேண்டுவது இன்னுமொரு சுதந்திரம் அதை வெல்ல இன்னும் ஐந்து வருடங்களாகலாம், ஐம்பது வருடங்களாகலாம். அதற்கான இயக்கம் தாமதிக்கப்படும் ஒவ்வொரு கணமும் அந்த விடுதலையும் தாமதமாகிறது என்பதை ஒவ்வொரு இந்திய முற்போக்குவாதியும் உணர வேண்டும்.

அவதானி

நன்றி - நூலகத்திட்டம்



# அரை நூற்றாண்டு ஆருடைய சுதந்திரம்

இந்தியா சுதந்திரத்தின் 50ம் ஆண்டு நிறைவு ஒகஸ்ட் 14 ம் நாள் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இந்தச் சுதந்திரத்தின் சர்வதேச முக்கியத்துவம் பெரிது. இதற்காக இரண்டு நூற்றாண்டுகளாகப் போராடி வந்த இந்தியத் துணைக்கண்ட மக்களின் கனவுகளை இந்தியா எவ்வளவு தூரம் நனவாக்கியுள்ளது என்பது அதிலும் முக்கியமான ஒரு கேள்வி.

இந்த ஐம்பது சுதந்திர ஆண்டுகளின் சாதனைகள் பற்றிப் பெரு தொடர்ச்சியான நிகழ்வுகளின் பின்பு முற்றிலும் வேறுபட்ட முடிபுகட்கே வர முடிந்தது. பாகிஸ்தானைப் பலவீனப்படுத்துவது, சிக்கிம்மை இத்தியாவினுள் இணைத்தது, நேபாளத்தின் மீதும் பூட்டான் மீதும் தனது அதிகாரத்துவத்தை நிலைநாட்டிய காஷ்மீரத்தை இந்தியாவின் ஒரு பகுதியாக்கியது போன்றனவும் இலங்கையினதும் பிற அண்டைநாடுகளதும் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருவதும் நிச்சயமாக இந்திய வெகுஜனங்களது நலன் சார்ந்ததல்ல. இவை இந்திய மேனாட்டுக் கலாசாரம் பரிச்சயமுள்ள ஒரு வலிய அதிகார வர்க்கம் நிருவாகம், கல்வி, பெருந்தொழில் போன்ற துறைகளில் தன் ஆதிக்கத்தை வலுப்படுத்தி வந்துள்ளது. அது இன்று ஏகாதிபத்தியத்துடன் குலாவுகிறது.

இந்திய முதலாளித்துவமும் அதன் மீது ஆதிக்கம் செலுத்தும் உலகவங்கி, சர்வதேச நாணய நிதி மற்றும் 'கற்' போன்ற சர்வதேச வர்த்தகக் கண்காணிப்பு அமைப்புக்கள் உட்பட்ட மேலை முதலாளித்துவத்தின் முகவர்கள் அபிவிருத்தி என்ற பேரில் மேற்மைப்படப் பலவும் உண்டு. ஆயினும் அவை பெருவாரியான இந்திய மக்களுடைய பெருமைக்கும் மகிழ்வுக்கும் நலனுக்கும் உரியனவா என்பது பற்றி மிகுந்த ஐயங்கள் உள்ளன. இந்தியப் பொருளாதாரம் மிகவும் வளர்ந்துள்ளது, தொழில் மற்றும் நவீன தொழில் நுட்பம் போன்ற துறைகளில் இந்தியாவின் முன்னேற்றம் பெரியது என்று சொல்கிறவர்கள் இன்னமும் இந்தியாவில் அரைவாசிக்கும் அதிகமான மக்களது அடிப்படையான தேவைகள் நிறைவு செய்யப்படவில்லை என்பதையும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்தியா உலகின் அதி பெரிய ஜனநாயக அரசு என்று மேலை நாடுகளாற் கொண்டாடப் படுகிறது. இந்த ஜனநாயகத்தின் கீழ் இந்து உயர்சாதியினர் மதத்தின் பேரால் முஸ்லிம்கள் மீதும் மரபின் பேரால் தாழ்த்தப்பட்ட சாதியினர் மீதும் கட்டவிழ்த்துவிடும் வன்முறை அண்மைக் காலங்களில் அதிகரித்துள்ளது. வேறெந்த நாட்டை விடவும் பெரிய அளவில் ஒரு ஆளும் பரம்பரை இருப்பதும் இந்தியாவில் தான். மத்திய அரசுக்கு உடன்பாடற்ற மாநில ஆட்சிகளைக் கலைக்கும் அதிகார துஷ்பிரயோகமும் இந்த நேரு 'ஜனநாயக' பரம்பரை தொடக்கி வளர்த்த ஒருமரபுதான்.

இந்தியா இன்று உலகின் முக்கியமான பிராந்திய வல்லரசுகளில் ஒன்றாகக் கருதப்படுகிறது. ஆயினும் இந்த வலிமை எதற்காகப் பயன்படுத்தப்படுகின்றது என்பதைக் கவனித்தால், தென் ஆசியாவில் இந்திய ஆளும் அதிகார வர்க்கத்தின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவது தான் அதன் முக்கியமான பயன்பாடாகத் தெரிகிறது. பங்களாதேஷ் விடுதலையை இந்தியாவின் சீரிய விடுதலைக் கோட்பாட்டின் உதாரணமாகக் கண்டவர்கள், அதன் முதலாளித்துவத்தின் விஸ்தரிப்புக் கொள்கையின் ஒரு பகுதியாகவே காணப்பட வேண்டும்.

1960 அளவில் இந்தியாவின் அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கும் சோவியத் யூனியனின் ஆசியப் பிராந்திய ஆதிக்க நோக்கங்கட்கும் ஏற்பட்ட பொது உடன்பாடு, இந்தியாவின் ராணுவ வலிமையின் துரித வளர்ச்சிக்கு உடந்தையாக இருந்தது. அதே வேளை, அந்த அதிகார வர்க்கத்தின் உண்மையான நலன்கள், மேலை முதலாளித்துவ நாடுகளுடன், முக்கியமாக அமெரிக்க ஏகாதிபத்தியத்துடனான, சமரசத்திலேயே தங்கி இருந்தது. சோவியத் யூனியனின் சரிவிற்கு முன்னமே, ராஜீவ் ஆட்சியில் அப்பட்டமாக வெளிப்பட்ட இப்போக்கு, கடந்த பத்தாண்டுகளில் வேகமாக வளர்ந்துள்ளது.

இந்தியக் கலாசாரமும் கலைகளும் இன்று உலகளாவிய மட்டத்தில் போற்றப்படுகின்றன. இவை யாருடைய கலாசாரம், யாருடைய கலைகள் என்ற கேள்வி ஒருபுறமிருக்க, கலையையும் கலாசாரத்தையும் விற்பனைப் பண்டமாக்கும் அதே ஆளும் அதிகார வர்க்கம், மேலைநாட்டுக் கலாசாரத்தின் மிகவும் சீர்கேடான அம்சங்களைத் திரைப்படம், தொலைக்காட்சி கேளிக்கை நிகழ்ச்சிகள் போன்றவற்றிலும் அன்றாட வாழ்விலும் உள்வாங்கி இந்திய மக்களது கலாசாரச் சீரழிவிற்குத் தன்னாலான பங்கைச் செலுத்தி வருகிறது.

இந்திய நாட்டின் அரச கரும மொழி என்ற பேரில், பிற தேசிய இனங்களின் மொழிகளது சமத்துவத்தை மறுக்கும் இந்திய ஆளும் வர்க்கம், இந்த மொழி வெறியைச் சமுதாயத்தின் கீழ் மட்ட அரசியலில் பயன்படுத்தும் அதேவேளை, வெளிவெளியாகவே ஒவ்வொரு துறையிலும் ஆங்கிலமொழி ஆதிக்கத்துக்கே வழிகோலுகிறது. ஆங்கிலம் கற்ற, கொண்டு வரும் நடவடிக்கைகள், ஆதிவாசிகள், மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களது வாழ்க்கை முறையையும் வாழும் உரிமையையும் மறுக்கும் முறையிலேயே அமைந்துள்ளன. இந்தியாவிலே பெண் பிரதமர்களும் பெண் முதலமைச்சர்களும் ஆட்சி செலுத்தியுள்ளதை வைத்து இந்தியப் பெண்கள் சுதந்திரம் பெற்றுவிட்டனர் என்று நம்மால் கூறி முடிகிறதா? இன்றும் பெண் சிசுக்கொலை, சீதனக் கொடுமை, குடும்ப வன்முறை போன்ற பண்பாட்டின் பேராலே கூடத் தொடர்கின்றன. அதேவேளை சிறுவர் மீதான வன்முறையும் அவர்களது உரிமை மறுப்பும் அதிகரித்துள்ளன.

இந்தியாவின் 50 ம் சுதந்திர ஆண்டின் முடிவில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த சனாதிபதி பதவியில் அமர்ந்து வரலாறு படைத்தார் எனப்படுகிறது. அற்ப அதிகாரமே படைத்த இப்பதவிக்கான தெரிவில் முதல் தடவையாகப் போட்டி இருந்தது என்பதும் வரலாறு படைத்த விடயம்தான். இந்த நிகழ்வின் முன்னும் பின்பும் இன்னும் நடக்கிற சாதிய வன்முறையும் சுரண்டலும் ஒடுக்குதலும் இன்னும் செய்ய வேண்டியது அதிகமென்றே கூறுகின்றன.

இந்தியாவின் இந்து - இந்திப் பெருந் தேசியவாதத்தின் விளைவாக எழுச்சி பெற்ற தேசிய இன உணர்வுகள் இன்று பல வேறு வடிவங்களில் இந்தியாவின் தேசிய இனங்களின் ஒற்றுமைக்கு ஆப்பு வைக்கின்றது.

அண்மைக்காலத்தின் இந்தியாவின் 'திறந்த பொருளாதாரக் கொள்கை', எந்த அந்நிய ஆதிக்கத்தை அகற்ற இரண்டு நூற்றாண்டுகளாக இந்திய மக்கள் போராடி வந்தார்களோ அந்த ஏகாதிபத்தியத்தின் காலில் விழுந்து வரவேற்று நாட்டைச் சூறையாட அனுமதி வழங்கியுள்ளது. 1947 முதல் 1980 கள் வரை இந்தியாவின் பொருளாதாரத்தின் அந்நிய மூலதனத்திற்கு இருந்து வந்த தடை தான் இந்தியாவின் தேசிய முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கும் தேசிய தொழில், விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளின் விடுதலைக்கும் துணைசெய்தது. இன்று, இதனால் வளர்ந்த முதலாளிகளில் ஒரு பகுதியினர் தரகு முதலாளிகளில் ஒரு அங்கமாகவோ பங்காளிகளாகவோ மாறித் தமது



(தொடர்ச்சி பக்கம் 07 இல்)

## 'இவர்' யார் ?



இவர் 1928 யூன் 14 ஆம் திகதி ஆர்ஜென்டினாவிலுள்ள றொசாரியோவில் பிறந்தார். இவரின் தந்தையின் பெயர் ஏர்னெஸ்டோ குவேரா லின்ச். தாயாரின் பெயர் சீலியா டீலா சேர்னா. இவரின் இயற்பெயர் ஏர்னெஸ்டோ குவேரா டீலா சேர்னா. இரை கியூபா மக்கள் 'சே' என்றே அழைத்தனர். 'சே (Che) என்பது ஆர்ஜென்டீன மொழியில் 'வாழ்த்து' என்பதாகும். அதன்படி இவர் ஏர்னெஸ்டோ சே குவேரா என்று அழைக்கப்பட்டார்.

லத்தீன் அமெரிக்கா நாட்டு சர்வாதிகாரிகளுக்கும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், சி.ஐ.ஏ. விற்கும் பெரும் சவாலாக இருந்த இவர் அமெரிக்க ஏகாதிபத்திய - சி.ஐ.ஏ. சதியினால் இலகுவாகவே படுகொலை செய்யப்பட்டார்.

இவர் ஆர்ஜன்டீனாவிலுள்ள புவனர்ஸ் அயர்சில் மருத்துவம் கற்று வைத்தியராகி எல்லா மத்திய அமெரிக்க நாடுகளுக்கும் விஜயம் செய்பவராகவும் அங்கு நோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பவராகவும் இருந்தார். கௌதமாலா நாட்டில் வசிக்கும் போது (1954) ஜகாபோ அர்பென்ஸின் அரசாங்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்.

1954 ஆம் ஆண்டு அமெரிக்க உளவுப் பிரிவான சி.ஐ.ஏ யின் உதவியுடன் கூலிப்படைகள் கௌதமாலாவை ஆக்கிரமித்தன. அதற்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்ட இவர் எதிரிகளிடம் சிக்கிக் கொள்ளாமல் மெக்சிக்கோவுக்கு தப்பிச் சென்றார். அங்கு தஞ்சம் புகுந்திருந்த கியூபப் புரட்சியாளர்களை சந்தித்தார். கௌதமாலாவில் இருக்கும் போது கியூப புரட்சியின் முக்கிய தாக்குதலான மொன்காடோ தாக்குதலில் ஈடுபட்ட நீக்கோ லோப்பேஷ்ஷை சந்தித்தார். அவரின் தொடர்பினாலும் இவர் மாக்சிய தத்துவங்களையும் நடைமுறைகளையும் கற்றார்.

1955 யூலையில் இவர் பிடல்கஸ்ரோவை சந்தித்து பின்னர் கஸ்ரோவின் தலைமையிலான கியூப புரட்சியின் ''துரித கெரில்லா நடவடிக்கைகளில்'' ஈடுபட்டார். 1956 இல் கியூபாவிற்கு சென்ற ஆரம்பத்தில் கெரில்லா படையினர் வைத்தியராக சேவை செய்தார். 1957 ஆம் ஆண்டு புரட்சிகரப் படையின் முதலாவது கொமாண்டராக தெரிவு செய்யப்பட்டார்.

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைக்கூலியான கியூப சர்வாதிகாரியான பெட்டிஷ்டாவின் அரசிற்கு எதிரான புரட்சிகர கெரில்லாப் போராட்டம் சியரா மாஸ்டிரா மலைகளிலிருந்து கியூப தீவின் மத்திய பகுதிக்கு 1958 இல் முன்னேறியது.

பெட்டிஷ்ஷாவின் இராணுவத்திற்கு எதிராக சண்டகிளேரா என்ற இடத்தில் நடைபெற்ற பாரிய புரட்சிகர யுத்தத்திற்கு இவர் தலைமை தாங்கி வெற்றி பெற்றார்.

1959 ஜனவரி முதலாம் திகதி புரட்சியின் வெற்றியின் பிறகு கியூபாவில் புரட்சிகர அரசு அமைக்கப்பட்டது. புரட்சிகர அரசின் முக்கிய தலைவர்களில் இவரும் ஒருவராக இருந்தார். 1959 இல் செப்டெம்பரில் கியூபாவின் விவசாயம் கைத்தொழில் என்பவற்றுக்கு இவர் பொறுப்பாக நியமிக்கப்பட்டார். 1959 நவம்பரில் தேசியவங்கியின் தலைவரானார். 1961 பெப்ரவரியின் கைத்தொழில் அமைச்சரானார்.

கியூப புரட்சிக்கு தலைமை தாங்கிய அரசியல் இயக்கத்தின் மத்திய தலைவர்களில் ஒருவராக இருந்தார். அவ்வியக்கம் 1965 இல் கியூப கம்யூனிஸ்ட் கட்சியாக பிரகடனம் செய்யப்பட்ட பிறகு அதன் மத்திய குழுவின் தலைவர்களில் ஒருவராக இவர் தெரிவு செய்யப்பட்டார்.

கியூப அரசின் வெளிவிவகார விடயங்கள் இவரின் பொறுப்பில் விடப்பட்டது. கியூபாவை பிரதிநிதித்துவம் செய்து பல நாடுகளிலும், அமைப்புகளிலும் குறிப்பாக ஐ.நா. சபையிலும் இவர் ஆற்றிய உரைகள் மிகவும் பெறுமதியானவை.

அடக்குமுறைகளுக்கு எதிரான புரட்சிகளுக்கெல்லாம் நேரடி பங்களிப்பை செய்ய வேண்டும் என்ற இவரின் தீவிர கொள்கையின் அடிப்படையில் 1965 ஏப்ரலில் இவர் கியூபாவை விட்டு வெளியேறினார். கொங்கோவில் நடைபெற்ற அரசிற்கு எதிரான போராட்டங்களில் பங்கெடுத்த இவர் 1965 டிசம்பரில் மீண்டும் கியூபாவுக்கு சென்றார்.

1966 நவம்பரில் பொலியாவுக்கு சென்று அங்கு நடைபெற்ற கெரில்லாப் போராட்டத்தில் பங்கெடுத்தார். அமெரிக்க ஆதரவு பொலிவிய படையினரால் 1967 ஒக்டோபர் 8 ஆம் திகதி கைது செய்யப்பட்டு 9 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார்.

கியூபாவின் விஷேட சூழ்நிலைகளுக்கு ஏற்ப புரட்சியின் புதிய செல்நெறியான 'துரித கெரில்லா நடைமுறைகளை' வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தினார். கெரில்லா போராட்டத்தையும், புரட்சியையும் ''சாதனைகளாகவே'' முன்னெடுத்த இவர் கியூபாவின் விஷேட சூழ்நிலைகளுக்கு ஏற்ப சோஷலிஸத்தை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கிய பங்களிப்பை செய்தார்.

இவர் (அதிதீவிரவாத நடைமுறைகளின் காரணமாகவும்) அமெரிக்க ஏகாதிபத்தியத்தினதும் சி.ஐ.ஏ. வினாலும் சூழ்ச்சிகளுக்கு மிகவும் இலகுவாகவே பலியாகினார் என்பது குறிப்பிடத்தக்கது.

நன்றி - நூலகத்திட்டம்



# நெஞ்சு பொறுக்குதில்லையே!...



## எதிர்நீச்சல் வல்லியன்

யுத்தம் என்பது யாருக்காக? ஜயசிகுறு, யுத்த நடவடிக் கையின் வெற்றி எவருக்காக? மக்களுக்காக - சமாதானத்திற்காக - பட்டினிச் சாவிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக - தரைவழிப் பாதையைத் திறப்பதற்காக - தமிழ்ப் பயங்கரவாதிகளுக்கு எதிராக நடத்தும் யுத்தம் என்று அரசு பிரச்சாரங்கள் அறிவுறுத்தக்கேள்வி.

எமது ஜனாதிபதி அம்பாந்தோட்டையில் என்ன சொல்லியிருக்கிறார்? "கொழும்பிலிருந்து மன்னாருக்கும் வவுனியாவுக்கும் தரைவழிப்பாதையைத் திறந்துள்ளோம். யாழ்ப்பாணத்திற்கும் தரைவழியாகச் செல்லும் காலம் வெகு தொலைவிலில்லை" என அறைகூவல் விடுக்கிறார். "வடக்கில் 3/4 பங்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட்டோம். அன்று பிரபாகரனின் கட்டுப்பாட்டிலிருந்த 80சதவீதப் பகுதி எமது கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது." எனப் பெருமைப்படுகிறார்.

இந்த அரசின் அக்கறையற்ற-அசிரத்தையான ஆட்சியின் ஆரம்பத்தில் நடாத்திய பேச்சுவார்த்தை நாடகத்தின் கையாலாகாத்தனத்தால் 3ம் கட்ட ஈழப்போர் ஆரம்பமானது. பேச்சுவார்த்தைக்கு அரசின் தூதுக்குழுவில் சென்ற லயனல் பெர்ணாண்டோ (அக்குழுவின் தலைவர் எவர் என்ற தீர்மானம் அப்போது எடுக்கப்படவில்லை என லயனல் ஒரு சந்தர்ப்பத்தில் கூறியது அரசின் பொறுப்பின்மையை உணர்த்தும்) அவர்கள் அதிகாரப் பரவலாக்கல் அலகில் ஓர் அம்சமாக வடக்கில் புலிகளின் நிர்வாகம், நீதிமுறையை அங்கீகரித்து அதற்கு இடையூறின்றிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும்., என்ற கருத்தை அப்போது முன்வைத்தார். ஆனால் அது எடுபடவில்லை.

"சமாதானம் சமாதானம் என்று ஆட்சியாளர் அதிகமாகக் கூறினால் அதற்கு அர்த்தம் யுத்தமே என்று மக்கள் நன்றாகத் தெரிந்துவைத்திருக்கிறார்கள்" என்று ஜெர்மன் நாடக அறிஞர் பிறக்ஹீன் ஒருமுறை கூறியது நினைவிற்கு வருகின்றது.

புலிகள் வடக்கைக் கட்டுப்பாட்டில் வைத்திருந்த காலத்தில் இலங்கையின் நடமாடும் சுதந்திரத்தில் புலிகளிடம் மட்டுமே பாஸ், பெறவேண்டியிருந்தது. நாடு இரண்டு துண்டாகவே இருந்தது. இப்போது புலிகளின் பாஸ், திட்டத்தினை அரசுதானே பெருந்தன்மையுடன் ஏற்று நாட்டை ஐந்து சிற்றரசுகளாக்கி ஆட்சி புரிந்து வருகின்றது. யாழ்ப்பாணத்தில் பாஸ், வவுனியாவில் பாஸ், திரிகோணமலையில் பாஸ், மன்னாரில் பாஸ், கொழும்பில் பாஸ். புலிகளிடம் ஒரு நிர்வாகம் இருந்தது. ஆனால் அரசிடம் உள்ள நிர்வாகப் பரவலாக்கலின் அமுலாக்கத்தின் வினோதம் அப்பப்பா! அம்மையாரே குறிப்பிடுகிறார் சிலவேளைகளில் பொலிசார் அப்பாவித் தமிழ் மக்களைக் கைது செய்து ரூ 25,000, - ரூ 30,000 என லஞ்சம் வாங்கிக்கொண்டு விடுதலை செய்கிறார்கள் என்று நான் பலமுறை கேள்விப்பட்டிருக்கிறேன். மூன்றுவருட யுத்தத்தின் அதிகாரப் பரவலாக்கல் சிறப்பை என்னென்பேன். அதியுத்தம ஜனாதிபதி அவர்களே ஒத்துக்கொண்டபின் வேறென்ன?

"பசிக்கொடுமை தாங்கமுடியவில்லை. நாளை உங்கள அலுவலக வளவில் தீக்குளிப்பேன். கப்பலில்லாத காரணத்தினால் திருகோணமலையில் நிர்க்கதிக்குள்ளான யாழ் பயணிகளின் அவலநிலையை அரசுக்கு உணர்த்த என்னையே தியாகம் செய்கிறேன்" எனக் கடிதம் எழுதிய கண்ணீரின் பெறுமதி என்ன?

வட-கிழக்குக்குப் பணிபுரியச் செல்ல மறுக்கும் பொலிசாரைப் பதவிநீக்க ஜனாதிபதி உத்தரவிடுகிறார். ஏற்கனவே 30,000 இராணுவத்தினர் படையை விட்டு தலைமறைவாகிவிட்டனர். திரும்பவும் பதவியேற்றுச் சென்ற பொலிசாரும் இராணுவத்தினரும் போரிலே பலியிடப்படுகின்றனர். அண்மையிலே களுத்துறையில் தற்கொலை செய்துகொண்ட தாயின் கண்ணீர் பேசியது எனது மகன் முதல்முறை இராணுவத்திலிருந்து தப்பி ஓடி வந்தான். இரண்டாவது முறை தப்பியோடி வந்தான். வேலை தேடித்திரிந்தான். அடையாள அட்டை இல்லை என்பதால் வேலை கிடைக்கவில்லை. பஞ்சத்தாலும் பயத்தாலும் தற்கொலை செய்துகொண்டு விட்டான் - என மரணவிசாரணைச் சாட்சியத்தில் அத்தாய் முறையிட்டாள்.

யாரிடம் நோவது? யாருக்கெடுத்துரைப்பது? "இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்துகெடுக்க உலகியற்றியான்" என்றார் வள்ளுவர். தனிமனிதனுக்கு உணவில்லையேல் இந்த ஜகத்தினை அழித்திடுவோம்" என்றார் பாரதியார். "நாமார்க்கும் குடியல்லோம். நமனை அஞ்சோம், என்றார் நாவுக்கரசர். இன்பத்துக்காக வாழ்கிறோம். இன்பத்துக்காகப் போராடுகிறோம். இன்பத்துக்காக மரணத்தை எதிர்கொள்கிறோம், என்று பூலியஸ் பியுசிக் தனது தூக்குமேடைக் குறிப்பிலே முழக்கமிட்டான்.

ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களின் உள்ளக்குமுறல்கள் வெடிக்கத்தான் செய்கின்றன. உப்புவெளிக் கண்ணாடித் தொழிற்சாலையில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக பல பொதுமக்கள் வடபகுதிக்கு இருதினங்களில் அனுப்பவென வவுனியாவிலிருந்து கொண்டுவரப்பட்டு மாதக்கணக்கில் அகதிகளாக்கப்பட்ட மக்கள் உண்ணாவிரதப் போரில் இறங்கினர். அதிகாரிகள் வந்தபோதும் கதவைத் தாழிட்டு மறித்தனர். அவர்களின் எரிச்சலும் மனக் குமைச்சலும் அரசின் பாதை திறக்கும் இயந்திரத் துப்பாக்கிக் குழாய்களிற்கு எங்கே புரியப்போகின்றது.

என்ன அநியாயம்? திருகோணமலையில் திருக்கடலூர் என்ற மீன்பிடிக் கிராமத்தில் அதிகாலை தொழிலுக்குச் சென்ற இளைஞர்கள் இருவரைத் துரத்திச் சுட்டு ஒருவனைக் கொன்று அவனைப் புலியாக்கி, காணப்பட்டவனையும், கட்டுப்போட்டவனையும் புலி. எனக் கைதுசெய்த போது அக்கிராமமே வீதியில் மறியல் போராட்டம் செய்து அவர்களை மீட்டுக்கொண்டது. அயல்கிராம சிங்கள மக்களும் இணைந்துகொண்டனர் என்ற தகவல் எமக்கு நம்பிக்கை தருகின்றது. ஆம். ஒடுக்கப்பட்ட தமிழ்மக்கள் உரியவாறு உருக்கொண்டெழுந்தால் சிங்கள மக்களும் அனுதாபம் கொள்கிறார்கள். ஆதரவு தருகிறார்கள். அணிதிரளவும் செய்கிறார்கள்.

என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்

என்றுமடியும் இந்த அடிமைகள் மோகம்

இந்த அரசின் யுத்தம் நீடிக்குமா? வருடா வருடம் 5,000 கோடி ரூபாய்களை அரச யுத்த இயந்திரம் விழுங்கி ஏப்பம் விடுகிறது. முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரி குணதிலக்க சொல்கிறார். ஜே. ஆர். ஆட்சியில் மாதம் ஒன்றுக்கு 18 படைவீரர்கள் கொல்லப்பட்டனர். பிரேமதாச காலத்தில் 35 பேர்வரை கொல்லப்பட்டனர். ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையார் காலத்தில் 225 பேர்வரை கொல்லப்படுகின்றனர். அதாவது தமிழ்மக்களை மீட்கும் போரில் 6848 படைவீரர்களைப் பலியிட்டுள்ளனர். அப்படியாயின் ஏன் யுத்தம் நீடிக்கின்றது.

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

# குடாநாட்டில்

## கண்டதும் | கேட்டதும்



29.05.97 அன்று இரவு சீருடையில் வந்த ஒருவர் வீட்டிற்கு வெளியே படுத்திருந்த என்னை எழுப்பி ''ரோச் அடித்தார். நான் அவரை யார் என்று கேட்க சத்தம் போடக்கூடாது என அச்சுறுத்தினார். பின்னர் எனது மருமகள் படுத்திருந்த அறையைக் காலால் உதைத்தார். விளக்குடன் வந்த மருமகளை விளக்கை உள்ளே கொண்டு போகுமாறு பணித்து விட்டு மருமகளின் பிள்ளைகளை அறைக்குள் விட்டுப் பூட்டினார். நீங்கள் எல்ரீ.ரீக்கு உணவு கொடுப்பவர்கள் என்று கூறி அச்சுறுத்தினார். பின்னர் எனது மருமகளை வெளியே இழுத்துச் சென்றார். இவ்வாறு சாவகச்சேரியில் இராணுவத்தால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்ட பெண் ஒருவரின் மாமனார் நீதிமன்ற அடையாள அணிவகுப்பில் சாட்சியம் அளித்தார். பாதிப்புக்கு உள்ளான இரண்டு பிள்ளைகளின் தாய் தனது வாக்குமூலத்தில் கீழ்வருமாறு கூறினார். எனது இரு பிள்ளைகளையும் அறைக்குள் பூட்டி விட்டுச் சத்தம் போட்டால் சுட்டு விடுவேன் என்று பயமுறுத்தினான் ஒரு சிப்பாய். உயரமான சுவருக்கு அடுத்த பக்கத்திற்கு என்னை அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவில் ஈடுபட்டான். சத்தம் போட்டால் சுட்டு விடுவேன் எனக்கூறி எனது உடலில் பட்டிருந்த மண்ணைத் தட்டிவிட்டு மற்றொரு இராணுவச் சிப்பாயை சைகை காட்டி அழைத்தான். அவனும் என்னைப் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கினான். இவ்வாறு அப்பெண் கூறினார். அடையாள அணிவகுப்பின் பின் சம்பந்தப்பட்ட இராணுவ சிப்பாயை 10 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும் 25 ஆயிரம் ரூபா பிணையிலும் செல்ல சாவகச்சேரி நீதிபதி அனுமதியளித்தார். கடந்த புதிய பூமியில் ஏற்கெனவே இடம் பெற்ற இராணுவத்தின் இரண்டு பாலியல் வல்லுறவுச் சம்பவங்களைச் சுட்டிக் காட்டியிருந்தது. அதில் அராலி மாணவிக்கு நஷ்டஈடாக ஒரு லட்சம் ரூபா இராணுவத்தால் வழங்கப்பட்டதாக ஒரு செய்தி வெளிவந்தது. அப்படியாயின் குடாநாட்டில் பாலியல் வல்லுறவுக்கு ராணுவம் தொகை தீர்மானித்திருக்கிறதா? என்றே கேட்கத் தோன்றுகிறது.

*****

குடாநாட்டில் யுத்த சூழலைப் பயன்படுத்தி அவ்வப்போது அடிக்க வேண்டியதை அடித்து கட்ட வேண்டியதைக் கட்டிக் கொண்டவர்கள் பலர். இதில் அரச உயர் அதிகாரிகள் தொட்டு அங்காடி வியாபாரிகள் வரை அடக்கம். அரச அதிபர்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. இதனாலேயே இதுவரை காலமும் இருநூறு கோடி ரூபாவிற்கு மேல் உணவு நிவாரணத்தில் மோசடி இடம் பெற்றுள்ளதாக அறிய வந்துள்ளது. இது சம்பந்தமாக முந்நாள் அரச அதிபர்கள், உயர் அதிகாரிகள், கூட்டுத்தாபன அதிகாரிகள் 21 பேர் உட்பட மற்றும் பொலிஸ் இராணுவ அதிகாரிகள் 143 பேர் விசாரிக்கப்பட இருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளது. யுத்த சூழலிலும் நெருக்கடிகளின் மத்தியிலும் சில அரச அதிபர்கள் உயர் அதிகாரிகள் ஏன் யாழ்ப்பாணத்தில் 'மக்கள் தொண்டு' செய்தார்கள் என்பது தற்போது தான் அதிக வெளிச்சத்திற்கு வந்துள்ளது. இவ்விடயம் தற்போது இரகசியப் பொலிஸ் விசாரணைக்குட்பட்டுள்ளதாக கொழும்புத தகவல் தெரிவிக்கிறது.

*****

வலி வடக்கு உடுவில் பகுதியில் இருந்து ஒருவர் கொழும்பில் தற்காலிகமாக வசித்து வரும் தமது உறவினர் ஒருவருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். அதில் தற்போதைக்கு யாழ்ப்பாணம் திரும்பும் உத்தேசத்தை கைவிடும்படியும் இங்கு இயல்பு வாழ்க்கை என்பது ராணுவ அச்சுறுத்தல் வாழ்க்கையாக இருந்து வருவதையும் சுட்டிக் காட்டியிருந்தார். உதாரணமாக தனது இருபது வயது மகனை எவ்வித காரணமும் இன்றி இராணுவம் பிடித்து அடித்து துன்புறுத்தியதையும் விபரித்திருந்தார். கடந்த க.பொ.த உயர்தரப் பரீட்சை எடுத்த அம் மாணவன் நடந்தோ அன்றி சைக்கிளிலோ செல்ல முடியாத அளவிற்கு கால்கள் பாதிக்கப்பட்டிந்ததாகவும் அக் கடிதத்தில் எழுதியிருந்தார். அதனால் ஒவ்வொரு பரீட்சை நாளிலும் ஓட்டோ பிடித்தே அம் மாணவன் பரீட்சை எழுதச் செல்ல வேண்டியிருந்ததாம். இவை தான் இன்றைய குடாநாட்டின் 'இயல்பு' வாழ்க்கை. இதனை அசாங்கம் விடுவிக்கப்பட்ட பிரதேசம் எனப் பறைசாற்றி வருகிறது.

*****

குடாநாட்டில் அமுலில் இருந்து வரும் கடல்வலயத் தடையை விரைவில் அகற்றப் போவதாக அங்குள்ள இராணுவ உயர் பீடம் அபிப்பிராயம் தெரிவித்துள்ளது. கடந்த பதிநான்கு ஆண்டுகளாக இது நடக்கும் நடக்கும் என எதிர் பார்த்த வடபகுதி மக்கள் கண்டது ஏமாற்றமும் விரக்தியுமேயாகும். இன்று மீனவர்களது வாழ்க்கையே சீர்குலைந்து சின்னாபின்னம் அடைந்த நிலையில் இத்தகைய அறிவிப்பு வெறும் கண் துடைப்பாக மட்டுமே இருக்க முடியும் என்பதே மக்களது அபிப்பிராயமாகும்.

நன்றி - நூலகத்திட்டம்



# நான் ஒரு பெண்



பெண்கள் தொடர்பான சரிநிகர் கட்டுரைகள்

நான் ஒரு பெண்,
கட்டுரைத் தொகுப்பு நூல்,
பாரதி வெளியீட்டகம்,
கொழும்பு,
126 ப.

**1990** - 96 கால இடைவெளியில் 'சரிநிகர்' செய்தி விமர்சன ஏட்டில் வெளியான 21 கட்டுரைகள் (''நான் ஒரு பெண்'' என்ற பெண்ணுரிமைக் குரலுடனான முதற் கட்டுரை தவிர்த்து) பெண்களும் குடும்ப உறவுகளும், பெண்களும் சட்டமும் சமூகமும் பெண்களும் தேசிய விடுதலைப் போரும், பெண்களும் யுத்தமும், பெண்களும் கலாசாரமும் பெண்களும் மதங்களும் எனும் தலைப்பினை ஆறு பகுதிகளாகப் பகுக்கப்பட்டு, ஒரு தொகுதியாக வந்துள்ளன. முதற் கட்டுரையும் மதம் பற்றிய நான்கு இறுதிக் கட்டுரைகளும் தமிழாக்கங்கள். இராசம்மா அநாமிகாவின் பெண்களும் குடும்ப உறவுகளும் பற்றிய 24 ம் பக்கக் கட்டுரை தவிர்ந்த மற்றவை சுருக்கமானவை. பத்திரிகையின் ஓரிரு இதழ்களில் வெளிவருவதற்காகப் 15 பேர் எழுதியுள்ள கட்டுரைகளின் தொகுப்பில் ஒரு முழுமையான பார்வையை விருத்தி செய்ய முடியுமா என்ற ஐயம் இயல்பாகவே எழுகிறது. நடைமுறைப் பிரச்சனைகட்கு முகங்கொடுக்கும் பெண்கள் எழுதியுள்ள இக்கட்டுரைகள் பெண்ணுரிமைக்கான போராட்டத்தின் நியாயங்களை வேறுபட்ட கோணங்களினின்றும் பெண்ணின் சமுதாய இருப்பின் வேறுபட்ட தளங்களினின்றும் அணுகினாலும் அதில் உள்ள பொதுவான செய்தி தெளிவானது. வரவேற்கத்தக்கது. பெண்களுக்கு எதிரான அடக்குமுறைகளும் உரிமை மறுப்பும் அடையாளங் காணப்படுவதுடன் அவை பற்றிய பல்வேறு சமூகப் பார்வைகளும் விமர்சிக்கப்பட்டுள்ளன. எல்லாப் பெண்களும் ஒரே பார்வைக் கோணத்தில் எழுதா விட்டாலும், சில அரசியப் பார்வைகளது அழுத்தம் சற்று அதிகமாக உள்ளதைக் காணலாம். ஆயினும், அது இத்தொகுப்பின் பயனையோ கட்டுரைகள் நூல்வடிவு பெற்ற நியாயத்தையோ குறைத்து விடாது.

குடும்ப நிறுவனம் பற்றிய அநாமிகாவின் கட்டுரையில் சில விடயங்களில் மிகவும் கருத்து மாறுபடுகின்றேன் என்றாலும், பாராட்டத்தக்க முறையில் ஆண்-பெண் குடும்ப உறவின் அசமத்துவத்தின் பல்வேறு அம்சங்கள் அங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. இது தொடர்பாக அவர் முன்வைக்கும் குடும்ப ஜனநாயகத்தைப் பலப்படுத்தும் ஆலோசனைகளில் ஒன்று அக்கட்டுரையின் கட்டுக்கோப்பைக் குலைக்கும் விதமாக அமைந்துள்ளது. ஒன்பது ஆலோசனைகளில் எட்டு குடும்ப நிறுவனத்துள் ஆண்-பெண் சமத்துவமும் பரஸ்பர அன்பும் பேணும் வழிமுறைகளாயிருக்க, ஒன்று மட்டும் 'தாய்வழி சமுதாயம் உருவாக்கப்படுவது' பற்றிப் பேசுகிறது. இது ஒரு தொழிற்சங்கத்தின் கோரிக்கைகள் பலவற்றின் நடுவில் கம்யூனிஸ சமுதாயம் உருவாக வேண்டும் என்ற கோரிக்கையையும் வைப்பது போல உள்ளது. பெண்ணுரிமைக் கோரிக்கைகளும் தவறவிடப்பட்ட ஒரு முக்கியமான விடயம் சமுதாயத்தில் குழந்தைகளில் இடம் பற்றியது. குடும்பம் என்ற அமைப்பின் கீழ், ஆண்-பெண் சமத்துவம் முழுமையாகப் பேணப்படக் கூடுமோ என்பது ஒரு பிரச்சினை. சிக்கலான இன்றைய சமுதாய அமைப்பிலும் எதிர்காலத்தின் சமூக அமைப்பிலும், குழந்தைகளது நலனுக்கும் பாதுகாப்புக்கும் விருத்திக்கும் தாயோ தகப்பனோ அல்லது பெற்ற இருவரும் மட்டுமே பூரண பொறுப்பேற்க முடியுமா? குடும்பம் என்ற விலங்கு உடையும் போது குழந்தைகள் மட்டும் அந்தப் பிடிக்குள் சிக்கிக் கிடக்க முடியுமா? அத்தகைய சூழலில் தாய்வழிச் சமுதாயம் என்ற கருத்தாக்கத்தை நாம் எப்படி விளங்கிக் கொள்ள முடியும்? சோஷலிஸ அரசு எனும் போது அங்கு கூட ஒரு அதிகார இயந்திரம் இருப்பதை நாம் உணர்கிறோம். சோஷலிஸ அரசு என்பது கம்யூனிஸத்திற்கான பாதையில் ஒரு போராட்டக் காலகட்டமாக இருக்குமே ஒழிய அதுவே பூரண சமத்துவமான சமுதாய அமைப்பாக அமைய முடியாது. இவ்விடத்து, ''சோஷலிஸம் வந்தால் எல்லாம் சரியாகி விடும்; அதுவரை வர்க்கப் போராட்டம் தவிர எதுவும் வேண்டாம்; அதைக்கூட பாராளுமன்ற மூலம் வென்றெடுக்கலாம்'' என்ற விதமாகப் பேசுகிறவர்களது ''மார்க்ஸியம்'', பெண்ணுரிமை கோருகிறவர்கள் சிலரிடம் மார்க்ஸியம் பற்றித் தவறான பார்வைகட்கு வித்திட்டுள்ளது. வேறு சிலருக்கு மார்க்ஸியத்தை எதிர்க்க ஒரு வசதியை ஏற்படுத்தியுள்ளது.

ஒளவையின் கட்டுரை சொல்வது போல, பெண்ணுரிமைக் கோரிக்கைகளை மறுக்க, மரபுவாதிகள் குடும்பம் பற்றிய கேள்வியை முன்நிறுத்துவது உண்மை. சாதியத்தையும் குறுகிய தேசியவாதத்தையும் இனவெறியையும் மத வெறியையும் நியாயப்படுத்தவும் பண்பாடும் குடும்ப வாழ்க்கையும் தொடர்பான வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. 'தேசிய நலன்கள்' மக்களின் சமத்துவத்தை மறுக்கும் ஒரு வசதியாகப் பயன்படுகின்றன. மறுபுறம், சமூக மாற்றம் பற்றிய அக்கறையற்ற பெண்ணியவாதிகள் இருப்பதை நிருஷா சுட்டிக்காட்டுகிறார். நடுத்தர மேல்தட்டு வர்க்கங்களில் உள்ள பெண்களது நலன், பேணும் பெண்ணியம் பற்றிய விழிப்பு இந்நூலின் கட்டுரையாளர்கள் பலரிடமும் உள்ளமை ஒரு வரவேற்கத்தக்க விடயம்.

பெண்களும் ஆண்கட்குச் சமமான ஊதியத்துடன் கனமான வேலைகளைச் செய்ய ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று பாஞ்சாலி கூறுவதும் வேலைபார்க்கும் பெண்கள் வேலையில் தொடர்வதற்கான வசதிகட்கான தேவை பற்றிய அவரது கருத்தும் மேலும் விரிவாக எழுதப்பட்டு பரவலாக உணர்த்தப்பட வேண்டும். 15 - 20 ஆண்டுகள் முன்பு சீனாவில் பெண்கள் பாரம் இழுப்பது பற்றிப் பேசிய ஒரு அமெரிக்கப் பெண்ணிலைவாதி, சீனா பெண்களைக் கஷ்டப்படுத்துவதாக முறையிட்டது நினைவுக்கு வருகிறது. ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று கூறும் பாஞ்சாலியும் அனுஷாவும் பேசும் பெண்ணுரிமை, வலியுறுத்தும் சம ஆற்றலும் உழைப்புச் சமத்துவமும் முற்போக்கானவை.

'பெண்கள், குழந்தைகள் உரிமையும் புதிய சட்டச்சீர்திருத்தமும்' பற்றிய கட்டுரை கூறுகிற தகவல்கள் முக்கியமானவை. ஆயினும், பெண்களும் சட்டமும் சமூகமும் பற்றிய பிற கட்டுரைகளினின்று இதன் குறிப்பான விமர்சனத் தன்மை இதை வேறுபடுத்தி நிற்கிறது. இக்கட்டுரைக்கும் இப்பகுதியில் உள்ள பிறவற்றுக்கும் உள்ள காலவேறுபாடு இந்த வேறுபட்ட தன்மைக்குக் காரணமாக இருக்கக்கூடும்.

பெண்களும் தேசிய விடுதலைப் போரும், பெண்களும் யுத்தமும் என்ற பகுதிகளில் வரும் கட்டுரைகளின் 'உள்ளடக்கம் இவ்வாறு இரண்டு பகுதிகளாக அவை பிரிக்கப்படுவதற்கான அடிப்படையை நியாயப்படுத்தவில்லை. இக்கட்டுரைகளில் வரும் கருத்துக்களில் வடக்கில் இன ஒடுக்கலுக்கெதிராக நடக்கும் போரில் பெண்களின் பங்கு பற்றிய விமர்சனம் ஒருதலைப்பட்சமான தன்மையினதாக உள்ளது. அண்மையில் சரிநிகரில் வந்த ராதிகா குமாரசாமி கட்டுரையை அடுத்து வெளியாகி வரும் விமர்சனங்களின் விவாதப் பண்பு இந்த நூலில் இல்லாமைக்கும் கட்டுரைகள் வெளிவந்த காலத்தில் சரிநிகரில் சிலர் எழுதத் தயங்கியது ஒரு காரணமாக இருக்கலாம். இன்று தென்னிலங்கையில் பொலிஸ் பெண்கள் துப்பாக்கி சகிதம் தெருக்களில் நிறையவே தெரிகின்றனர். இதுபற்றி நம் மனிதாபிமான மனித உரிமையாளர்களது அபிப்பிராயங்களை நாம் இன்னும் அறியக்கிடைக்கவில்லை. இனி வரவுள்ள கட்டுரைகள் இது பற்றியும் கவனிக்குமென எதிர்பார்க்கிறேன்.

பெண்களும் கலாசாரமும் பற்றிய பகுதியில் வரும் பாஞ்சாலியின் கட்டுரைத் தலைப்பு கற்பு பற்றியதாயினும், அதுவும் யுத்தம் சார்ந்த பகுதிக்கு உரியதே. ஒரு ஆய்வரங்கு பற்றி நிருஷாவின் விமர்சனப் பாங்கான தொகுப்புரை. கருச்சிதைப்பு பற்றி பாரிஸில் இருந்து 'சமர் கட்டுரைக்கு எதிர்வினை அனிசாவின் கட்டுரை. இவ்வகையில் பெண்களும் கலாசாரமும் பற்றிய பகுதி அதன் தலைப்பைப் போதியளவு நியாயப்படுத்தவில்லை. எவ்வாறாயினும், அனிசாவின் கட்டுரை, சமர் கட்டுரை கிளப்பிய கேள்விக்கு ஐரோப்பாவில் தரப்பட்ட பதிலடிகளை விட விரிவான, தெளிவான, காத்திரமான ஒரு மறுப்பு.

கட்டுரைப் பொருள் எதிர்காலத்தில் விரிவாகப் பேசப்பட வேண்டிய ஒரு விஷயம். அனிசாவின் கட்டுரை அதற்கு மிக உகந்த ஆரம்பப் புள்ளி. (சமர் கட்டுரைப் பகுதிகளையும் பிற்சேர்க்கையாகத் தந்திருக்கலாம்)

பெண்களும் மதங்களும் பற்றி ஏனோ கட்டுரைகள் எல்லாமே மொழி பெயர்ப்புகளாகவே உள்ளன. இதில் கிறிஸ்தவ, இஸ்லாமிய, இந்து மதங்களில் பெண்களது கீழ்நிலை தெளிவாகவே வலியுறுத்தப்பட்டுள்ளது. பௌத்தம் பற்றிய கட்டுரையில் பௌத்தத்தில் பெண்களது கீழ்நிலை வெளிப்போக்குகளால் ஏற்பட்ட கறையென்று சித்திரிக்கப்படுகிறது. புத்தர் தனது காலத்தின் ஆணாதிக்கச் சிந்தனையிலிருந்து முற்றாக விடுபட்டவர் என்பது உண்மையல்ல. அவரது போதனைகளிலும் நடைமுறையிலும் அவரது குறைபாடுகட்கு ஆதாரங்கள் உள்ளன. இது பற்றிப் 'ப்ரவாத' சஞ்சிகையில் மூன்று, நான்கு ஆண்டுகள் முன்பு விரிவான கட்டுரைகளைக் கண்ட நினைவுண்டு. பத்திரிகைக்கான கட்டுரைத் தெரிவின் போது இது போன்ற விடயங்களில் கவனமாயிருந்திருக்கலாம்.

கட்டுரை எழுதப்பட்ட சூழ்நிலைகளின் விளைவான குறைபாடு பற்றி வெளியீட்டுரை தெளிவாகவே குறிப்பிட்டுள்ளது. ஆயினும் இந்நாட்டில் பெண்ணுரிமை பற்றியும் பெண்ணியம் பற்றியும் விளக்குகிறதாகச் சொல்லிச் சிலர் இதற்கு முன்பு எழுதிய நூல்களை விட இத்தொகுப்பின் கனதி உண்டு.

சி. சிவசேகரம்

# சாதி அமைப்பும் பௌத்தமும்

பௌத்த மத பீடத்தில் (சுங்கவிர) சாதிமுறை பின்பற்றப்படுகிற தென்பதை நிராகரிப்பது சரித்திர அறிவு குறைவையும், உண்மை நிலைமை தெரிந்திராதது போல் பாசாங்கு பண்ணுவதுமேயாகும். அக்கறையுள்ளவர்கள் கலாநிதி கே.மல்லகொடவின் ''சிங்கள சமூகத்தில் பௌத்தம்: 1750 - 1900'' என்ற நூலை வாசியுங்கள்.

இந்த நூல் இலங்கையில் பௌத்த குருமார்கள் மத்தியில் சாதி என்ன பாத்திரம் வகிக்கின்றது என்பதற்கான சரித்திர பின்னணியை விளக்குகின்றது.

தற்போது என்ன யதார்த்தமாயுள்ள தென்பதை வணக்கத்திற்குரிய வல்பொல ராகுல தேரர் அவர்கள் ''பிக்சுகே குல பேதய'' அதாவது பிக்குகள் மத்தியில் சாதி என்ற தலைப்பில் ஒரு கட்டுரையில் விளக்குகின்றார்.

''சியாம் நிக்காயாவைச் சேர்ந்த பிக்குமார்களுக்கு நான் அறியத் தருவது என்னவெனில் அவர்கள் பாதுகாப்பது பௌத்தத்தையல்ல கொய்கம சாதியையே.... அவர்கள் பௌத்தத்தின் பாதுகாவலர்களாக காட்சி கொடுக்கின்ற போதும் உண்மையில் அதை நாசமாக்குகின்றார்கள்.

''ராவய'' பத்திரிகையின் யூன் முதலாந் திகதிய இதழில் சியாம் நிக்காயவில் சாதி உணர்வு மேலோங்கியிருக்கிறது - கொய்கம சாதியினர்களில் இருந்து வருகிறவர்களுக்கே மதகுருவாக பிரதிஷ்டம் செய்யப்படுவது - என்பதையும் ஏனைய நிக்காயாக்களில் சாதி அமைப்பு முறை நிலவுகின்றதென்பதையும் விளக்கியிருந்தது. குறிப்பிட்ட சாதிகளின் நலனுக்கே ஏனைய நிக்காயாக்கள் செயற்படுகின்றன. (சங்கலில் சாதி அமைப்பு - விஜேசிங்க பெலிகல்ல)

எந்த ஒரு நிக்காயாவும் ஒரு நோடிய சாதியைச் சேர்ந்த நபரை மதகுருவாக்க மாட்டாது. ஏனைய ''தாழ்த்தப்பட்ட'' சாதிகளைச் சேர்ந்தவர்களை மதகுருவாக்க மறுத்தது தொடர்பான விபரங்களையும் அவர்களிடமிருந்து தானங்களை மறுத்தது தொடர்பான சம்பவங்களையும் - ''ராவய'' அதன் முன்னைய இதழ்களில் வெளியிட்டிருந்தது.

சகல மதங்களையும் சேர்ந்த தலைவர்கள் மதத்தின் பெயரால் உள்ள நடைமுறைகளை விவாதிக்க மறுத்து வருகின்றனர். ''மத நம்பிக்கை''யுள்ளவர்கள் மேலே இது பற்றிப் பேசலாம் என்கின்றனர். ஆனால் இலங்கை பௌத்தர்கள் கிறிஸ்தவ மதத்தை விமர்சித்தே வந்துள்ளனர். இது 1865 ம், ஆண்டில் ''பாணந்துறை வாதம்'' ஆரம்பமானதிலிருந்து இருந்து வந்துள்ளது. 1910 களில் கிறிஸ்தவத்தின் ஆதாரங்கள்'' என்ற நூலும், அதையொட்டி பல பிரசுரங்களும் வெளியாகின. அந்த நாட்களில் கிறீஸ்துவ பாதிரிமாரும் பௌத்த மதகுருமாரும் சுதந்திரமாக வாதப் பிரதிவாதங்களில் ஈடுபட்டிருந்தனர்.

இன்று பௌத்தத்தில் சாதி அமைப்பு வகிக்கும் பாத்திரம் மட்டுமல்ல, பிக்குணிமார் முறை ஒன்று இல்லாமையும், இளம் சிறார்களை பிக்குமார்களாக்குவது தொடர்பாகவும் ஒரு திறந்த மனத்துடனான கலந்துரையாடல் அவசியம்.

நன்றி: த.ஐலண்ட் 26.06.97

நன்றி - நூலகத்திட்டம்



(1ம் பக்கத் தொடர்ச்சி...)

## புதுப் போராட்ட .....

கள் தொழிற்சங்க அங்கத்துவங்களைத் துறந்துள்ளனர்.

எனினும் தொழிலாளர்கள் அவர்களது எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க தயங்கவில்லை. அவ்விதத்தில் மத்துரட்ட பிளேண்டேசன் கம்பெனிக்கு எதிரான போராட்டம் முன்மாதிரியானதாகும்.

தோட்ட லாபத்தில் பத்துவீதப் பங்குகளை தொழிலாளர்களுக்கு வழங்குவதாக உறுதியளித்திருந்த போதும் கம்பெனிகள் வழங்கவில்லை. இழுத்தடித்து வருகின்றன.

அந்த பத்துவீதப் பங்குகளை வாக்குறுதியளித்தபடி வழங்க வேண்டுமென்றே கந்தப்பொளயிலுள்ள கீழுள்ள 20 தோட்டங்களை சேர்ந்த 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தனர். தொழிற்சங்க தலைவர்கள் நம்பிக்கை இழந்திருந்த போதும் தொழிற்சங்க பேதமின்றி மத்துரட்ட பிளாண்டேசனை சேர்ந்த எல்லா தொழிலாளர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒரு கம்பெனியின் கீழுள்ள தொழிலாளர்கள் அனைவரும் ஒன்றுபட்டது போன்று 22 கம்பெனிகளுக்கு எதிராகவும் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு தமது உரிமைகளை நிலைநாட்டுவார்கள் என்ற நம்பிக்கையை மத்துரட்ட போராட்டம் ஊட்டியுள்ளது.

இந்த நம்பிக்கையிலிருந்து கற்று புதிய தொழிற்சங்க நடைமுறைகளையும் அணுகுமுறைகளையும் கையாண்டு தொழிலாளர்களின் உரிமைகளை நிலைநாட்ட தொழிற்சங்கங்கள் முன்வர வேண்டும் என்ற செய்தியையே மத்துரட்ட போராட்டம் உணர்த்துகிறது. அத்துடன் தொழிலாளர்களை அடிமையாக்கும் கூட்டு ஒப்பந்தம் என்ற அடிமைசாசனத்தில் தொழிற்சங்கங்கள் கைச்சாத்திடக் கூடாது என்று எச்சரிக்கையும் விடப்படுகிறது.

(12ம் பக்கத் தொடர்ச்சி...)

## வடக்கு நோக்கி ...

சரியான தடத்தில் பயணம் செய்தால் ஒழிய எடுக்கப்படும் முயற்சிகள் புறக்குடத்து நீராகி விடவே செய்யும்.

அரசாங்கமும் ஜனாதிபதியும் திடமான முடிவுடன் செய்ய வேண்டியவற்றை ஒன்றன் பின் ஒன்றாகச் செய்து புதிய சூழலை ஏற்படுத்தினால் ஒழிய இன்றைய நிலையில் இருந்து விடுபட முடியாது. ஒன்று, தற்போதைய தீர்வுத் திட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தக்க நியாயமான அம்சங்களைக் கொண்டதோர் திட்டமாக வடிவமைத்துக் கொள்வது. அதேவேளை விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தைக்கு முன் நிபந்தனையற்ற வகையில் அழைத்து பேச்சுவார்த்தையை நடாத்துவது. அதற்கு முன்னதாக யுத்த நிறுத்தத்தை கொண்டு வருவது அல்லது தணித்த நிலையில் பேச்சுவார்த்தையைத் தொடர்வது. தேவைப்படின் மூன்றாவது மத்தியஸ்தத்தை பயன்படுத்திக் கொள்வது. இவ்வழிமுறை மூலம் அரசியல் தீர்வுத் திட்டத்தை குறைந்த பட்ச அடிப்படையில் தானும் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக்கிக் கொள்வது இன்றைய சூழலில் அவசியமாகும். இத்தகைய நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள முன்வருமானால் அதனை தமிழ் மக்களின் இன்றைய எதிர்கால நலன்களில் இருந்து புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தைக்கும் யுத்த நிறுத்தத்திற்கும் முன்நிபந்தனை இன்றி வந்து கொள்வது அவசியமாகும்.

மேற்கூறிய வழிமுறைகளை அக்கறையோடும் இதய சுத்தியோடும் அரசாங்கம் செய்தல் வேண்டும். அதை விடுத்து வடக்கு நோக்கி படையெடுப்பை ஒருபுறத்தில் உக்கிரப்படுத்திக் கொண்டும் மறுபுறத்தில் தெற்கு நோக்கி சமாதான செய்தியை யாத்திரை யாக்கியும் எவ்வித பலாபலன்களையும் தேடிக் கொள்ள முடியாது.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

## நெஞ்சு ...

சிங்கள மக்களின் பொருளாதாரச் சுமைகளை நீக்கக்கூடிய பொருளாதாரத் திட்டம் அரசிடம் இல்லை. தன்னிறைவுப் பொருளாதாரத்தை-தேசியப் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் உலக வங்கியும் அனுமதிக்கப்போவதில்லை. திறந்த பொருளாதாரம் என்ற நவகாலனித்துவப் பிசாசு மனிதமுகங்களை உருச்சிதைப்பதையே விரும்பும். பல்தேசியக் கம்பனிகளுக்கு இலங்கையின் தேசியவுடமைச் சொத்துக்களின் 100 வீதத்தினையும் தனியார்மயமாக்கித் தாரைவார்க்கும் வரையில் சிங்கள-தமிழ்-முஸ்லிம் பேதம், வெறுப்பு தூண்டப்பட்டு யுத்தம் தொடரவேண்டும். அப்போதுதான் பேரினவாத அரசு அமெரிக்க எசமானர்களையும், ஆயுத வியாபாரிகளையும் ஆனந்தப்படுத்த முடியும். சிங்கள மக்களுக்கு கடந்த 15 வருடங்களாகப் போகமுடியாத வடக்கு-நைனாதீவு நாக விகாரைக்கு போக்குவரத்துச் செய்யப் பாதை திறப்போம். சங்கமித்தை அனுராதபுரம் வந்த பாதையில் பயணம் செய்வோம். "ஒரே இனம். ஒரே நாடு" என ஒற்றைப்பரிமாண ஊர்வலமும் கூத்தும் குசியும் கொண்டாட்டமும் நடாத்தி அனுராதபுரத்திலிருந்து செங்கல்லும் புத்தகமும் யாழ்ப்பாணம் நூலகம் செல்ல, மட்டக்களப்பு நூலகம் இராணுவ முகாமாகின்றதே என்ற கேவலம் மறுபக்கமுமாக வெண்தாமரை வீசி வெண்புறா பறக்க யுத்தம் தொடரும் தொடரும் என்றே சமாதானம் சொல்கின்றது.

எனவே தான் இந்த அரசும் யுத்தத்தை தொடருமா? நிறுத்துமா? ஏனிந்தச் சந்தேகம்.

"தடுமாறும் அரசுக்குச் சட்டங்கள் காவல்

தவறான விளக்கங்கள் தர நூறு பேர்கள்

சுடுமாறு உத்தரவாயின் யார் வீழ்ந்தாலென்ன?

துணைநிற்கும் அரசாங்கம் பிறகென்ன கவலை,,

என்று பாடினார் ஓர் கவிஞர்.

(1ம் பக்கத் தொடர்ச்சி...)

## ஜனநாயக விரோத கொலைக்கள ஆட்சி நடாத்திய...

கட்சிக்கு எப்போது மக்கள் பற்றி ஜனநாயகம் பற்றி ஞானதோயம் பிறந்தது.

பதினேழு வருட ஆட்சியில் இடம் பெற்ற தேர்தல்களில் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்வது, மாற்றுவது, கள்ள வாக்குகளின் நுணுக்கங்கங்களைக் கற்று கொடுப்பது, அதிகாரிகளை அதற்கு ஏற்றவாறு அமர்த்துவது என்பனவற்றில் உச்சநிலைகளைத் தோற்றுவித்து அவற்றின் மூலம் தேர்தல் வெற்றி பெற்று வந்த ஐக்கிய தேசியக் கட்சி இன்று நியாயமான தேர்தலுக்கு காணிக்கை கட்டுவது வேடிக்கையாக உள்ளது. இவை மட்டுமன்றி வாழ்க்கைச் செலவின் உயர்வு பற்றி ஐக்கிய தேசியக் கட்சியால் பேசமுடியுமா? 1977 தேர்தலில் ஜே.ஆர்.எட்டு றாத்தல் உணவுத்தானியம் தருவேன் என்று கூறிய வாக்குறுதிக்கு பின்பு கிடைத்த பதில் தாராள இறக்குமதியின் மூலம் சந்தையில் தானியங்கள் நிரம்பி உள்ளன. மக்களால் அதனை வாங்கிக் கொள்ள இயலும் என்பதாகவே இருந்தது.

இனப்பிரச்சினைக்கு கொடுத்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது என்பதே தனி வரலாறாகி நிற்கிறது.

எனவே பஞ்சமா பாதகங்களைப் புரிந்து பதினேழு வருடகால இருண்ட ஆட்சி நடாத்தி வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் எஞ்சி நிற்கும் தலைவர்களும் இன்று எங்கே தீக்குளித்து தமது பாவங்களைக் கழுவிக் கொண்டனர் என்றே மக்கள் கேட்கிறார்கள். இன்று பரிசுத்தமானவர்கள் போல் நடிப்பது மீண்டும் அதிகாரத்திற்கு வரும் பேரவாவே அன்றி மக்களின் நல்வாழ்வுக்கு அல்ல என்பது புரிந்து கொள்ள முடியாத புதிர் அல்ல. மாறி மாறி இரு பெரும் உயர்வர்க்க ஆளும் கட்சிகளான ஐ.தே.கட்சியையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கூட்டையும் பதவிக்கு கொண்டுவரும் போக்கை கைவிட்டு புதியபாதையில் செல்வது பற்றிய அரசியல் சிந்தனைக்கு வருவதே மக்கள் முன் உள்ள தேவையாகும்.

(12ம் பக்கத் தொடர்ச்சி...)

## இலங்கையிலும் கள்ளச்சாமியார்கள் ..

பலமிருந்தாலேயே தவறு செய்யும் ஒரு சாமியாரை சட்டத்தின் முன் நிறுத்த முடிகிறது.

பிரேமானந்தாவை கைது செய்யும் போது கூட அவர் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்வதற்காகவே பல குற்றங்களை செய்தார் என்று கூறப்பட்டே கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் கைது செய்யப்பட்ட (1994 டிசம்பரில்) காலகட்டத்தில் புலிகளுக்கு எதிராகவும் புலிகளின் அனுதாபிகளுக்கு எதிராகவும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு இந்தியாவில் அவ்வளவாக எதிர்ப்பு இருக்கவில்லை. எனவேதான் பிரேமானந்தாவை புலிகளுக்கு உதவியவர் என்ற பேரில் கைது செய்வது இலகுவாயிருந்தது. இதிலிருந்து தவறு செய்தாலும் ஒரு சாமியாரை இந்தியாவில் கைது செய்வது அவ்வளவு இலகுவான காரியமல்ல என்பதே விளங்குகிறது.

இந்தியாவைப் போன்று சாமியார்களின் சாம்ராஜ்யங்கள் இல்லா விட்டாலும் இங்கும் சாமியார்கள் இருக்கிறார்கள். நல்ல சாமியார்களும் இருக்கிறார்கள். பிரேமானந்தா போன்ற சாமியார்களும் இருக்கிறார்கள்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்புக்கு போய்வரும் ஒரு தமிழ் சாமியார் பற்றி புதியபூமிக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. கொழும்பிலுள்ள அடியார்களுடன் உல்லாசமாக உலாவி வரும் அந்தக் காவியுடைச் சாமியார் பிரேமானந்தாவை விட பாலியல் சேஷ்டைகளிலும் குறைந்தவரல்ல என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு சில இளைஞர்களைத் தன் வசப்படுத்தி வைத்துக் கொண்டுள்ள இந்தச் சாமியார் நம்பி வரும் பக்தர்களிடம் தனது சித்து விளையாட்டுக்களைக் காட்டி வருவதாக மட்டகளப்பில் பரவலாகப் பேசிக் கொள்ளப்படுகிறது.

மனோவலிமையை வைத்துக் கொண்டு சாமியார் என்ற பேரிலும், மனோவியல் நிபுணர்கள் என்றபேரிலும் இலங்கையிலும் இருக்கும் சமூகவிரோதிகள் தொடர்பாக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

(12ம் பக்கத் தொடர்ச்சி...)

## காணாமல் போவோரின் எண்ணிக்கையிலும்...

என்றும் அவ்வறிக்கை மேலும் தெரிவித்துள்ளது.

சர்வதேச மன்னிப்புச் சபை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவிடம் காணாமல் போனோர் பற்றிய 400 முறைப்பாடுகள் பற்றி விசாரிக்கும்படியும் அதற்கு பொறுப்பானவர்களை நீதியின் முன் நிறுத்தும்படியும் ஏற்கனவே கேட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

மனித உரிமைகள் மீறல் நடவடிக்கைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுப்பதாக அரசாங்கம் எவ்வளவுதான் கூறினாலும் வருடாந்தம் குறைந்தது 600 பேர் காணாமல் போகும் அபாயம் நிலவுவதாக மன்னிப்புச்சபை அதன் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

எனவே விளையாட்டுப் போட்டிகளில் மட்டுமல்ல காணாமல் போவோர் எண்ணிக்கையிலும் இலங்கை சாதனைப் படைக்கத் தவறவில்லை.

தற்போது ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவைச் சேர்ந்த பிரதிநிதிகள் மனித உரிமை மீறல் பற்றிய நேரடித் தகவல்களைப் பெறுவதற்காக இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். அவர்கள் யாழ்ப்பாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் சென்று வந்துள்ளனர். அதேபோன்று கொழும்பிலும் அரசாங்க எதிர்கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்தும் வருகின்றனர். இவர்களது யாழ்ப்பாண விஜயத்தின் போது அங்கு 625 பேரை ராணுவத்திடம் பறிகொடுத்த நிலையில் ஏங்கித் தவித்து நிற்கும் பெற்றோர் மனைவிமார், சகோதரர்கள், உறவினர்கள் என்போரைப் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பான காணாமல் போனோர் சங்கப் பிரதிநிதிகள் ஒரு விபரமான மனுவைக் கையளித்து தமது சோகக் கதைகளைக் கூறி உள்ளனர். இதனால் மேலும் பல தகவல்கள் வெளிவரலாம் என எதிர்பார்க்கப் படுகிறது. இவை எல்லாம் இராணுவ அணுகுமுறையில் எத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரப் போகின்றது என்பதே கேள்வியாகும்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

## விலைகள் அதிகரிப்பால்..

ஏற்பட்டு வரும் சீரழிந்த வங்குரோத்து நிலையின் வெளிப்பாடுமாகும்.

ஆதலால் இரு பெரும் ஆண்ட பரம்பரைக் கட்சிகளிடம் எதிர்பார்த்து எதிர்பார்த்து ஏமாறுவதை விட அதற்கும் அப்பாலான ஒரு மக்கள் அரசியல் பாதை ஒன்று திறக்கப்படுவதன் தேவையையும் அவசியத்தையும் மக்கள் உணர்ந்து செயற்படுவதற்கு படிப்படியாகத் தம்மைத் தயாராக்கிக் கொள்ளல் வேண்டும். இத்தகைய புதிய முயற்சி ஒன்று எடுக்கப்படல் வேண்டும். இதனை மக்கள் மட்டுமன்றி மக்கள் மத்தியில் இருந்து வரும் நேர்மையான அரசியல் சக்திகள் அனைத்தும் உணர்ந்து செயற்பட முன்வரல் வேண்டும்.

(4ம் பக்கத் தொடர்ச்சி)

## எனது மகளை... .

நாட்டின் சகல மக்களுக்கும் புகட்ட வேண்டும். அந்த அடிப்படையில் பிரசாரங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். பாலியல் வெறியை தூண்டும் ரீ.வீ நாடகங்கள், படங்கள், விளம்பரங்கள், பத்திரிகைகள், நூல்களுக்கு கடும் தடைவிதிக்க வேண்டும். பாலியல் சம்பந்தமான எல்லா குற்றங்களுக்கும் உயர்ந்த பட்ச தண்டனை வழங்க வேண்டும்.

இவ்வாறு எல்லா ஆலோசனைகளையும் முன்வைத்த போதும் எனது மகளுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்பதும் எனக்கு விளங்குகிறது.

இப்படிக்கு
டி.சுவாமிநாதன்
வத்தளை

நன்றி - நூலகத்திட்டம்


# புதிய பூமி

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

PUTHIYAPOOMI


# வடக்கு நோக்கி படையெடுப்பு
# தெற்கு நோக்கி சமாதான செய்தி

வடக்கிற்கு தரை வழிப்பாதை திறப்பு என்ற பெயரில் வன்னி நெடுஞ்சாலை ஊடாகவும் நெடுங்கேணி வழியாகவும் படையெடுப்பு நகர்ந்து கொண்டிருக்கிறது. மே மாதம் பதின்மூன்றாம் திகதி ஆரம்பித்த வெற்றி நிச்சயம் படையெடுப்பு நூறாவது நாட்களைத் தாண்டி புளியங்குளம் முற்றாகப் பிடிபடாத நிலையில் நிற்கிறது. புளியங்குளத்திலிருந்து சுமார் முப்பந்தைந்து மைல்கள் கிளிநொச்சி வரை சென்றடைந்தாலே தரைவழிப்பாதையைப் படையணிகளால் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வர முடியும். அந்த தூரத்தைச் சென்றடைய எத்தனை மாதங்கள் நாட்கள் செல்லும் என்பதே அரசாங்கத்தின் முன் உள்ள பிரச்சினை இதனாலேயே யுத்தத்தைத் தொடர்ந்து நடாத்துவது தாங்க முடியாத சுமை என்ற நிலை அரசாங்க உயர் மட்டத்தில் ஒரு பிரிவினரிடம் கருத்தாகத் தோன்றியுள்ளது. ஆதலால் எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்கு முன் வெற்றியோ தோல்வியோ யுத்தத்தை ஒரு கரைக்கு கொண்டு வந்து சேர்த்து விட வேண்டும் என்ற கருத்தை ஜனாதிபதி வெளிப்படையாக முன்வைத்திருப்பதாக அறிய முடிகிறது. ஆனால் யுத்தத்தை தொடர்ந்து நடாத்த வேண்டும் என்ற பிடிவாதத்தில் சிலர் இருப்பதாகவும் அத்தகையோருக்கும் ஜனாதிபதிக்கும் கருத்து முரண்பாடுகள் தோன்றி இருப்பதாகவும் கூறப்படுகிறது. இறுதியாக ஜனாதிபதியின் கருத்தான யுத்தத்தை ஒரு தணிவுக்கு கொண்டு வந்து அரசியற் தீர்வு முயற்சிகளை முன்னெடுக்க வேண்டும் என்பது மேலோங்கியுள்ளதாகவும் அதன் வெளிப்பாடே அனுராதபுரத்தில் நடந்தேறிய சமாதானச் செய்திக்கான நிகழ்ச்சியும் கூட்டமும் என அறிய முடிகிறது.

வடக்கு நோக்கிய படையெடுப்பிற்கு புலிகள் தமது கடும் எதிர்ப்பைக் காட்டி எதிர்த்தாக்குதல்கள் தொடுத்து நிற்கிறார்கள். அதனால் அரசின் இராணுவ ரீதியான இலக்கை அடைந்து கொள்வதில் கடும் சிரமத்தை எதிர்நோக்க வேண்டியுள்ளது. அதே வேளை தெற்கிலே அரசியல் தீர்வுத்திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி தனது ஆதரவை வழங்காது உள்ளார்ந்த எதிர்ப்பை காட்டி நிற்கிறது. இன்னொரு புறத்தில் தீர்வுத்திட்டம் முழுமையாக இல்லை என்ற ஆதங்கம் தமிழ் கட்சிகளிடையே காணப்படுகின்றது.

இந்நிலையில் வெளி சக்திகள் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கிக் கொள்வதிலும் தத்தமது நலன்களுக்கு அதனைப் பயன்படுத்தி நிற்பதிலும் மிகக் கவனமாக இருந்து வருகின்றன. மேற்கு நாடுகளும் அமெரிக்காவும் ஒரு புறம் சமாதானத் தீர்வுக்கு செயல்படுவதுபோல் காட்டிக் கொண்டு மறுபுறத்தில் பயங்கரவாதத்தை ஒழிப்பது என்பதன் பேரில் யுத்தத்திற்கு ஆதரவும் ஆலோசனைகளும் வழங்குகின்றன.

இதனால் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வு நாய்ப்பூட்டு நரிப்பூட்டினுள் அகப்பட்டதொன்றாகிக் காணப்படுகிறது. நேர்மையாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் ஆற்றலையும் ஆளுமையையும் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் முற்று முழுதாக இழந்து விடவில்லை என்றும் கூறப்படுகிறது. ஆனால் அதற்குரிய

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

## திருக்கடலூர்:
# மக்கள் எழுச்சியின் முன்னுதாரணம்

காற்றோடும் கடலோடும் போராடிப் போராடி அச்சத்தை அறியாது வாழ்ந்து வரும் கடற்தொழிலாளர்கள் நிரம்பிய கிராமம் திருக்கடலூர். திருகோணமலை நகரத்தை மருவியதாக நிலாவெளி வீதியை ஒட்டியே திருக்கடலூர் கிராமம் கடலோரம் அமைந்துள்ளது. கடந்த 18.08.97 அன்று அதிகாலையில் அக்கிராமத்தைச் சுற்றி வளைத்த ராணுவம் தேடுதல் என்ற பெயரில் அதனை ஆரம்பித்த கணத்திலேயே காரணம் எதுவுமின்றி துப்பாக்கிப் பிரயோகம் நடாத்தியது. அதனால் கடற்தொழிலுக்குச் செல்வதற்குத் தயாராகிக் கொண்டிருந்த இலட்சுமி காந்தன் தமயந்தன் என்னும் 22 வயது இளைஞன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டான். கி.முரளிதரன் படுகாயம் அடைந்தான். மேலும் துப்பாக்கி வேட்டுக்கள். தேடுதல் என்ற பெயரில் நடாத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்த பொலிசார் தீவிர முயற்சி செய்கிறார்கள். ராணுவத்திற்கும் புலிகளுக்குமிடையில் இடம் பெற்ற மோதலில் அகப்பட்டே மேற்படி இளைஞன் கொல்லப்பட்டதாகக் கூறி அதற்கு இளைஞனின் தந்தையிடம் ஒப்புதல் வாங்க முற்படுகிறார்கள் பொலீசார். அத்துடன் காயமடைந்த இளைஞனும் அவரது காயத்திற்கு முதலுதவிச்சிகிச்சை செய்த நான்கு இளைஞர்களுக்கும் புலிப்பட்டம் சுமத்தி சிறை பிடிக்கும் நோக்கமும் செயல்படத் தொடங்கியிருந்தது.

ஆனால் கண்முன்னே காரணமின்றிச் சுட்டுத்தள்ளி உயிர்ப்பலியெடுத்ததையும் படுகாயப்படுத்தியதையும் புலிப்பட்டம் சுமத்த முனைவதையும் திருக்கடலூர் மக்கள் ஏற்றுக் கொள்ளத்தயாராக இருக்கவில்லை. இவ் அநீதிக்கும் அக்கிரமத்திற்கும் எதிராக நீதி கேட்டு மக்கள் வீதியில் இறங்கினர். ஒன்று இரண்டாகிப் பத்தாகி நூறாகி ஆயிரமாகி விஸ்வரூபமெடுத்தது மக்கள் எழுச்சி. ஆண் பெண் சிறுவர் இளைஞர் குழந்தைகள் எனத்திரண்டு வீதி மறியல் போராட்டத்தில் குதிக்கிறார்கள். வாழ்ந்தால் நீதி கேட்டு நியாயத்தின் பக்கம் நின்று வாழ்வோம் அன்றேல் நீதிக்காக ஒன்றுபட்டு வீழ்வோம் என நெஞ்சுயர்த்தி மக்கள் அலை மேவி நிற்கிறது. ராணுவமும் பொலிசும் மலைக்கிறது. ஒருவரைச் சுடலாம் அல்லது ஒரு சிலரைச் சுடலாம். ஆனால் எழுச்சி பெற்று நிற்கும் கிராமம் முழுவதையும் சுட்டுப் பொசுக்குவது இலகுவானதொன்றல்ல என்பது உணர்த்தப்பட்டது. திருக்கடலூர் மக்களின் எழுச்சியும் ஐக்கியமும் ஆக்கிரோசமும் ஆயுதப்படையினரைப் பணிய வைத்தது.

இறுதியில் மக்கள் முன்வைத்த கோரிக்கைகள் ஏற்கப்பட்டன. இறந்த இளைஞனின் சடலம் தந்தையிடம் சாதாரண நடைமுறையின் கீழ் ஒப்படைக்கப்படுகிறது. கைது செய்யப்பட்டு புலிப்பட்டம் சூட்டப்பட இருந்த இளைஞர்கள் மக்களிடம் நிபந்தனை இன்றி ஒப்படைக்கப்படுகின்றனர். மக்கள் எழுச்சிக்கு முன்னே ஆயுதப் படை பணிந்து கொள்ள நேரிட்டது. அன்றைய மக்கள் எழுச்சிக்கு திருக்கடலூரின் பக்கமாக அமைந்துள்ள இரு சிங்கள மீனவக் கிராமங்களான சிறிமாபுரம், விஜிதபுரம் ஆகியவற்றின் மக்களும் இளைஞர்களும் ஆதரவு கொடுத்து அவ்வெழுச்சியில் பங்கு கொண்டமையும் குறிப்பானதோர் அம்சமாகும். இனம் இனத்தை நாடும் என்று கூறுவது வழமை. இங்கே வர்க்கம் வர்க்கத்தை நாடிநின்றமையும் கவனத்திற்குரிய ஒன்றாகும். அண்மைக் கால ராணுவ அட்டூழியங்களுக்கு மத்தியில் திருக்கடலூர் மக்கள் எழுந்த எழுச்சி முன்னுதாரணமானதாகும்.

## காணாமல் போவோரின் எண்ணிக்கையிலும் சாதனை

'யாழ் குடாநாட்டை படைகளின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட பிறகு 1995 முதல் 1997 வரை 648 பேர் காணாமல் யாழ் குடாநாட்டிலிருந்து போயுள்ளனர். இது ஒப்பீட்டளவில் கூடிய எண்ணிக்கை ஆகும்' என்று சர்வதேச மன்னிப்பு சபை 1997 ஏப்ரல் மாதம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கப் படைகள் மீதான தமிழீழப் புலிகளின் தாக்குதலுக்கு எதிரான நடவடிக்கை என்ற பேரிலேயே அதிகமானோரை காணாமலாக்கும் நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டுள்ளனர்

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

## இலங்கையிலும்
# கள்ளச்சாமியார்கள் கவனம்



சுவாமியாக இருந்த பிரேமானந்தா ஆயுட்கால தண்டனை அனுபவிக்கும் கைதியாகிவிட்டார். அவர்மீது பாலியல் வன்முறைக் குற்றங்களும், கொலைக்குற்றங்களும் சுமத்தப்பட்டிருந்தன.

மாத்தளையில் பிறந்த அவர் மாத்தளையிலும், கொழும்பு றொஸ்மீட் பிளேசிலும் ஆசிரமங்களை வைத்திருக்கிறார், பின்னர் இந்தியாவுக்கு சென்ற அவர் திருச்சியில் 250 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசிரமமொன்றை நடத்தி வந்தார் என்பதும் இலங்கையிலிருந்தும் பல அறிஞர்கள் அவரிடம் சென்று ஆசிர்வாதம் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயல்பாகவே மனிதரில் சிலருக்கு இருக்கும் மனோவலிமையை வளர்த்தெடுத்து தங்களை கடவுளின் அவதாரங்கள் என்ற தானத்தில் வைத்துக் கொண்டு நல்லொழுக்கத்துடன் நேர்மையானவர்களாக இருக்கின்ற பல சாமியார்களும் இருக்கிறார்கள், மனோவலிமையை வளர்த்து மனோதத்துவ நிபுணர்களாகி மக்களுக்கு விஞ்ஞானரீதியாக விளக்கங்கள் அளித்து செய்தவர்களும் இருக்கிறார்கள். இதற்கு உதாரணமாக டாக்டர் கோவூரை குறிப்பிடலாம்.

மனோவலிமையை வளர்த்து சாமியானவர்களும் சரி, மனோவலிமையை வளர்த்து மனோதத்துவ நிபுணர்களானவர்களும் ஒரு வகையில் மக்களுக்கு சேவை செய்யக்கூடியவர்களே. மக்களின் மனோவியாதிகள், நோய்கள் போன்றவற்றை மனோவியல்ரீதியாக அணுகி குணப்படுத்த வல்லவர்கள்.

ஆனால் மனோவலிமையை பயன்படுத்தி தங்களை நாடிவருபவர்களை பலவீனப்படுத்தி ஆட்டிப் படைக்கின்ற சாமிகளும் இருந்தார்கள். இருக்கிறார்கள் மனோவியல் நிபுணர்களும் இருக்கக் கூடும். மனோவலிமையை பயன்படுத்தி பாலியல் துஷ்பிரயோகங்களிலும் ஏனைய சமூக விரோத செயல்களிலும் ஈடுபடுவதை மன்னிக்க முடியாது.

விஞ்ஞான நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மனிதகுலத்துக்கு அழிவை கொண்டுவரும் விஞ்ஞானிகளை எவ்வாறு மன்னிக்க முடியாதோ அதேபோன்று மனோவலிமையைப் பயன்படுத்தி மனிதகுலத்தை சீரழிக்கும், அழிவு பாதையில் இட்டுச்செல்லும் மனோவலிமை நடவடிக்கைகளையும் மன்னிக்க முடியாது.

அரசியல் தலைவர்களையும் அரசாங்கத்தையும் ஆட்டிப்படைப்பதில் சாமியார்களுக்கு நிகர் யாரையும் இந்தியாவில் காண முடியாது எனலாம். அவர்கள் செய்யும் குற்றச்செயல்கள் அம்பலத்துக்கு வருவதும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்படுவதும் அபூர்வமாகும். அரசியல்ரீதியான

(தொடர்ச்சி பக்கம் 11 இல்)

வெளியிடுபவர் : இளையதம்பி தம்பையா, இல14, 57வது ஒழுங்கை, கொழும்பு -06. பிரசுரம்: நவமக அச்சகம், 334 காலி வீதி இரத்மலானை.